# மட்டக்களப்பு மாநகர சபையின் ஐம்பத்தொன்பதாவது சபை அமர்வுக்கான கூட்டறிக்கை. 07-04-2022

மட்டக்களப்பு மாநகர சபையின் ஐம்பத்தொன்பதாவது சபை அமர்வு (49வது பொதுக் கூட்டம்) 2022-04-07ம் திகதி (வியாழக்கிழமை) மு.ப. 09:30 மணிக்கு மாநகர சபா மண்டபத்தில் கௌரவ மாநகர முதல்வர் திரு. தியாகராஜா சரவணபவன் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது.

**சமூகமளித்த சபை உறுப்பினர்கள்:**

01. கௌரவ பிரதி முதல்வர் கந்தசாமி சத்தியசீலன்
02. கௌரவ உறுப்பினர் மயில்வாகனம் நிஸ்கானந்தராஜா
03. கௌரவ உறுப்பினர் ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை
04. கௌரவ உறுப்பினர் தம்பிராஜா இராஜேந்திரன்
05. கௌரவ உறுப்பினர் கந்தசாமி ரகுநாதன்
06. கௌரவ உறுப்பினர் விஜயகுமார் பூபாலராஜா
07. கௌரவ உறுப்பினர் சிவானந்தன் மேகராஜ்
08. கௌரவ உறுப்பினர் புஸ்பராஜ் ரூபராஜ்
09. கௌரவ உறுப்பினர் துரைசிங்கம் மதன்
10. கௌரவ உறுப்பினர் யூசைமுத்து பிலிப்
11. கௌரவ உறுப்பினர் சிவம் பாக்கியநாதன்
12. கௌரவ உறுப்பினர் சச்சிதானந்தம் கமலரூபன்
13. கௌரவ உறுப்பினர் சீனித்தம்பி ஜெயந்திரகுமார்
14. கௌரவ உறுப்பினர் மாசிலாமணி தியாகராஜா ஸ்ரீஸ்கந்தராசா
15. கௌரவ உறுப்பினர் மயில்வாகனம் ரூபாகரன்
16. கௌரவ உறுப்பினர் அந்தோனி கிருரஜன்
17. கௌரவ உறுப்பினர் மாசிலாமணி சண்முகலிங்கம்
18. கௌரவ உறுப்பினர் இராசலிங்கம் அசோக்
19. கௌரவ உறுப்பினர் சிவராசா சிவராஜ்
20. கௌரவ உறுப்பினர் செல்வராசா குமார்
21. கௌரவ உறுப்பினர் திருமதி. சாரதாதேவி கங்கேஸ்வரன்
22. கௌரவ உறுப்பினர் திருமதி சசிகலா விஜயதேவா
23. கௌரவ உறுப்பினர் திருமதி. பற்றிமா பல்தசார்
24. கௌரவ உறுப்பினர் தெய்வநாயகம் சிவலிங்கம்
25. கௌரவ உறுப்பினர் பேரின்பசாமி சுரேஸ்குமார்
26. கௌரவ உறுப்பினர் வடிவேல் குபேரன்
27. கௌரவ உறுப்பினர் திருமதி. வர்ணேஸ்வரி ரவிச்சந்திரன்
28. கௌரவ உறுப்பினர் ஸ்ரீபன் ராஜன்
29. கௌரவ உறுப்பினர் திருமதி.சிவாகரன் சுலக்ஷனா
30. கௌரவ உறுப்பினர் ஜேம்ஸ் நவரெத்தினராசா திலீப்குமார்
31. கௌரவ உறுப்பினர் தம்பிப்பிள்ளை சிவானந்தராஜா
32. கௌரவ உறுப்பினர் சூசைமுத்து கிளனி வசந்தகுமார்.

**சமூகமளிக்காத சபை உறுப்பினர்கள்:.**

01. கௌரவ உறுப்பினர் செல்வி. தயாளகுமார் கௌரி
02. கௌரவ உறுப்பினர் திருமதி. மேரி கிறிஸ்டினா சசிதரன்
03. கௌரவ உறுப்பினர் முகமட் உசனார் முகமட் நிப்லார் – வெளிநாடு சென்று விட்டார்.

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்:**

01. திரு.என்.மதிவண்ணன் - மாநகர ஆணையாளர்.
02. திருமதி.ஜி.எச்.சிவராஜா - மாநகர பிரதம கணக்காளர்.
03. திருமதி.சி.லிங்கேஸ்வரன் - மாநகர பொறியியலாளர்.
04. திரு.பா.நடேசமூர்த்தி - நிருவாக உத்தியோகத்தர் (பதில் செயலாளர்).
05. திரு.சி.ராஜ்மோகன் - பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - சபைப்பகுதி.
06. திரு.எஸ்.சிவபுண்ணியமூர்த்தி - ஆராச்சி.
07. திரு.எஸ்.ஜயந்தன் - அலுவலக பணியாளர் ( ஔிப்பதிவுக் கடமை)
08. திரு.எஸ்.இ.இருதயராஜன் - ஓய்வு பெற்ற அலுவலக பணியாளர் (வீடியோ பதிவு)
09. திரு.எஸ்.நிக்சன் - வர்ணம் தீட்டுபவர் (ஒலித் தொகுதி ஒழுங்கமைப்பாளர்)

## ➢ இறைவணக்கம்

கௌரவ முதல்வர் அவர்கள் சபைக்கு வருகை தந்தவுடன் மாநகர கீதம் இசைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து கௌரவ முதல்வரின் அறிவிக்கப்பட்டதற்கமைய ஒரு நிமிட இறை வணக்கம் இடம் பெற்றது.

## ➢ தலைமை உரை

கௌரவ முதல்வர் அவர்கள் தமது உரையினை நிகழ்த்துகையில், இன்றைய சபை அமர்விற்கு வருகை தந்திருக்கும் கௌரவ பிரதி முதல்வர் அவர்களே, மாநகர சபையின் கௌரவ உறுப்பினர்களே, மாநகர ஆணையாளர் அவர்களே, பதில் செயலாளராகக் கடமையாற்றும் மாநகர சபையின் நிர்வாக உத்தியோகத்தர் அவர்களே, சபையின் பிரதம கணக்காளர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் எனது அன்பு கனிந்த வணக்கம்.

இன்று அன்றைய அமர்வில் எம்முடன் இணைந்து கடமையாற்றி இறைபதம் அடைந்த அமரர். திரு வேலுப்பிள்ளை தவராஜா அவர்களது இடத்திற்கு புதிய உறுப்பினராக நியமனம் பெற்று வந்துள்ள திரு.சிவானந்தன் மேகராஜ் அவர்களை சபை சார்பாக நாங்கள் வரவேற்கின்றோம். அத்துடன் எங்களுடன் மிகவும் தர்க்கமான முறையில் மாநகர ஆணையாளராக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள திரு.மா.தயாபரன் அவர்களுக்குப் பதிலாக நியமிக்கப்பட்டு கடமையைப் பொறுப்பேற்றுள்ள புதிய ஆணையாளர் திரு.நா.மதிவண்ணன் அவர்களையும் எமது சபை சார்பாக வரவேற்றுக் கொள்கின்றேன். இங்கு இடமாற்றம் பெற்று வந்துள்ள புதிய ஆணையாளர் அவர்கள் கடந்த காலங்களில் மிகத் திறமையாக செயற்பட்டவர். தற்போது இவர் எம்முடன் இணைந்து ஈடுகொடுக்கக் கூடிய வகையில் தமது திறமைகளைக் வெளிக் காட்டி சிறப்பான முறையில் செயற்பட்டு மாநகர சபையின் சேவைகளுக்கு தமது பங்களிப்பினை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் கடந்த மாதத்தில் மாநகர சபையினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களில் மீள் குத்தகை கோரப்பட்டு 18 வேலைத் திட்டங்கள் செயற்படுத்துவதற்காக கையளிக்கப் பட்டுள்ளன.அதே போன்று உலக வங்கி மூலமாக நிதி கிடைக்கப் பெற்று அதற்கான ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

குறிப்பாக கொக்குவில் சந்தைக் கட்டிடம், பொதுச்சந்தை Solar Pannel பொருத்துதல் என்பவற்றுக்கு கேள்வி கோரப்பட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளன. மேலும் இன்னுமொரு 24 மில்லியன் ரூபாய்கள் உலக வங்கி மூலம் எங்களுக்கு கிடைக்க வேண்டியுள்ளது.. அதற்கான திட்டங்களும் எங்களால் சமர்பிக்கப்பட்டுள்ளது அது அங்கீகரிக்கப்படும் பட்சத்தில் அதனையும் நாங்கள் முன்னெடுக்கலாம் என நினைக்கின்றேன்.

மேலும் கடந்த மாதம் காத்தான்குடி நகர சபையினர் எமது மாநகர எல்லைக்குள் அத்து மீறி பிரவேசித்து நிர்வாக ரீதியிலான வரி வசூலிப்பு நடவடிக்கையில் ஈடுப்பட்டமை எங்களால் அவதானிக்கப்பட்டதன் பேரில் அதற்கு எதிரான செயற்பாடுகளும் அத்துடன் எங்களது பிரதேச எல்லைகளை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளும் எங்களால் முன்னெடுக்கப்பட்டது. இது தொடர்பாக உரிய தரப்பினருடனும் நாங்கள் தொடர்பு கொண்டுள்ளோம். கௌரவ ஆளுனருடனும் நாங்கள் பேசியுள்ளோம். இந்த விடயத்தில் எங்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக அவர் உறுதியளித்துள்ளார். எனினும் எமது எல்லைக்குட்பட்ட காணிகளுக்கு உரிமையாளர் வங்கிக் கடன் பெறுவதற்கு ஏதுவாக சில சான்றிதழ்கள் அவர்களால் வழங்கப்பட்டு வருவதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. எனவே எமது பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ள காணிகள், கட்டிடங்கள் என்பவற்றுக்கான உரித்துரிமை, வீதி ரேகை என்பவை தொடர்பான சான்றிதழ்கள் எமது மாநகர சபையினாலேயே வழங்கப்பட வேண்டும் மிகத் தெளிவாக இந்தச் சபையில் வைத்து கூறிக் கொள்கின்றோம். எனினும் சில வங்கிகள் எமது எல்லைக்குள் இருக்கின்ற ஆதனங்களுக்கு காத்தான்குடி நகர சபையினால் வழங்கப்படுகின்ற உரித்துரிமை, வீதி ரேகை தொடர்பான சான்றிகழ்களை வைத்துக் கொண்ட கடன் வழங்கும் செயற்பாட்டை முன்னெடுப்பதாகவும் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. எனினும் இனிவரும் காலங்களில் இவ்வாறு வழங்கப்படுகின்ற சட்ட விரோதமான ஆவணங்களை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதுடன், அதனை ஆதாரமாக வைத்து கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது எனவும் வினையமாக கேட்டு கொள்கின்றேன்.

எமது 2020ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் குறிப்பிடப்பட்டிருந்து செய்யப்படாது தாமதப்படுத்தப்பட்ட வேலைகளில் 90%மான வேலைகள் முடிவடைந்துள்ளது. அத்துடன் 2021 ஆம் ஆண்டிற்கான வேலைகளில் 80%மான வேலைகளும் முடிவடைந்துள்ளது. எனவே நாங்கள் வேலைகளை மிக விரைவாக செய்ய வேண்டியுள்ளது. அத்துடன் எங்களால் முன்மொழியப்பட்ட வாழ்வாதாரச் செயற்திட்டங்களை நாங்கள் மிக வரைவாக நடைமுறைப்படுத்த வேண்டும். தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொரளாதார நெருக்கடியினையும் கருத்தில் கொண்டு எங்களால் பாதிட்டில் வாழ்வாதாரச் செயற்திட்டங்களுக்கான . முன்மொழிவுகளையும் இந்த வார இறுதிக்குள் அல்லது அடுத்த வார நடுப்பகுதிக்குள் வழங்கும் பட்சத்தில் நாங்கள் அதனையும் விரைவாக முன்னெடுக்க முடியும்.

மேலும் நிலையியற் குழுக்கள் தங்களது செயற்பாடுகளை மிகவும் வினைத்திறனோடு செயற்படுத்த வேண்டும். அவ்வாறு செயற்படுகின்ற போது தான் நிருவாகத் தரப்பினரது ஒத்துழைப்பினையும் பெற்றுக் கொள்ளலாம்.அதற்கான வழி வகைகளை எமது புதிய ஆணையாளர் உங்களுக்கு செய்து கொடுப்பார் என நினைக்கின்றேன். எனவே எதிர்காலத்தில் எங்களது வேலைகள் மிகவும் வேகமாக மக்களைச் சென்றடைய வேண்டும். எனவே நாங்களும் அதற்காக மிகவும் வினைத்திறனுடன் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டு எனது தலைமை உரையை நிறைவு செய்த கொள்கின்றேன்.

- **கடந்த சபை அமர்விற்கான கூட்டக் குறிப்புகளை உறுதிப்படுத்தல்.**

1. 04.03.2022ம் திகதிய 58வது அமர்வுக்கான (48வது பொதுக் கூட்டம்) கூட்டறிக்கையை உறுதிப்படுத்தல்.

கௌரவ முதல்வர் அவர்கள், கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இக் கூட்டக்குறிப்பில் திருத்தங்கள் ஏதும் இல்லாதவிடத்து, அதனை ஒருவர் முன் மொழிந்து வழி மொழியுமாறு கௌரவ உறுப்பினர்களை கேட்டுக் கொண்டார்.

குறித்த கூட்டறிக்கையில் திருத்தங்கள் ஏதுமில்லாத நிலையில் பின்வருவோர் முன்மொழிந்து வழிமொழிய சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு. தம்பிராஜா இராஜேந்திரன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.விஜயகுமார் பூபாலராஜா.**

## 01. கௌரவ முதல்வர் அவர்களின் அறிவிப்புக்கள்:

1. இன்றைய சபை அமர்விற்கான நிகழ்ச்சி நிரலில் பல விடயங்கள் இருப்பதனை தாங்கள் அறிந்திருப்பீர்கள். நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக நிகழ்வுகளை உரிய நேரத்தில் முடிப்பதற்கு கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். மேலும் நிகழ்ச்சி நிரலுக்கு அப்பாற்பட்ட விடயங்களை பேசுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

2. சபையில் பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டு அது தொடர்பாக கௌரவ உறுப்பினர்கள் உரையாற்றும் போது, அவ் உரைகள் யாவும் குறித்த பிரேரணை சம்பந்தமானதாகவே இருக்க வேண்டும். அதை விடுத்து அப்பிரேரணைக்கு சம்பந்தமற்ற விடயங்கள் பேசப்படுமாயின் அவை அக் கூட்டக் குறிப்பில் சேர்க்கப்பட மாட்டாதென்பதனையும் அறியத் தருகின்றேன். மேலும் எமது மாநகர எல்லைக்கும், எமது செயற்பாட்டிற்கும் அப்பாற்பட்ட விடயங்கள் தொடர்பாக பிரேரணைகள் கொண்டு வரப்பட்டு, அது குறித்த கௌரவ உறுப்பினரால் சபையில் முன்வைக்கப்படும் போது அது தொடர்பில் எவரும் உரையாற்றவோ அல்லது கருத்துத் தெரிவிக்கவோ முடியாது என்பதுடன், அது தொடர்பாக பேசப்படுமாயின் அது கூட்டக்குறிப்பில் இடம் பெற மாட்டாது என்பதையும் அறியத் தருகின்றேன்.

3. மாநகர சபையின் ஆணையாளராக கடமையாற்றி வந்த திரு.மா.தயாபரன் அவர்கள் கௌரவ கிழக்கு மாகாண ஆளுநர் அவர்களால் இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து புதிய மாநகர ஆணையாளராக திரு. என்.மதிவண்ணன் அவர்கள் கடந்த 31.03.2022 அன்று கடமையைப் பொறுப்பேற்றுள்ளார் என்பதுடன் அவர் இன்றைய அமர்விற்கும் சமூகமளித்துள்ளார் என்பதையும் சபையினர்க்கு தகவலாக அறியத் தருகின்றேன்.

4. இச்சபை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதலாக எம்முடன் பயணித்த கௌரவ உறுப்பினர்களான திரு.ஜயாத்துரை சிறிதரன் மற்றும் திருமதி.குஜாஜினி பாலகிருஸ்ணன் ஆகியோரது உறுப்பினர் பதவியானது கடந்த 04.03.2022ந் திகதியன்று வெளியிடப்பட்ட 2269/80ம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக

இல்லாதொழிக்கப்பட்டுள்ளது என்பதை சபையினர்க்கு தகவலாக அறியத் தருவதுடன், அவர்களுக்கு சபை சார்பில் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது சபைக்கான பதில் செயலாளராக கடமையாற்றி வந்த திரு.பா.நடேசமூர்த்தி, நிர்வாக உத்தியோகத்தர் அவர்கள், உள்ளூராட்சி ஆணையாளர் அவர்கள் "சபைச் செயலாளருக்கான ஆளணி வெற்றிடமாக காணப்படுமிடத்து அப்பதவிக்குரிய கடமைகளை மாநகர ஆணையாளரே மேற்கொள்ள வேண்டும்" என தனது EP/14/Legal/BAT/MC இலக்க 18.03.2021ந் திகதியிடப்பட்ட கடிதத்தின் வாயிலாக குறிப்பிட்டுள்ளார்" என்பதுடன், தனது வேலைப் பழு காரணமாக பதில் செயலாளராக கடமையாற்ற முடியாதுள்ளதாக தெரிவித்து கடிதமொன்றை சமர்ப்பித்துளார். அந்த வகையில் புதிய மாநகர ஆணையாளர் அவர்களே இன்று முதலாக சபையின் பதில் செயலாளராக செயற்படுவார் என்பதனையும் சபையினர்க்கு அறியத் தருகின்றேன்.

- **சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதிக் குழுவின் சிபார்சுகள்.**

காலத்துக்கு காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை உள்ளடக்கிய 1947ம் ஆண்டின் மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 28ம் பிரிவுக்கு அமைவாக மட்டக்களப்பு மாநகரசபையின் நிதிக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டு இவ்வுயரிய சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்ட பின்வரும் விடயங்களை மாநகர சபையின் கௌரவ முதல்வர் என்ற வகையில், தியாகராஜா சரவணபவன் ஆகிய நான் இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

**2022.04.01ம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெற்ற 61வது நிதிக் குழுக் கூட்டத்தில் நிதிக் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்த நிலையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக,**

## 1. தற்காலிக தொழிலாளர் சேவைக் கால நீடிப்பு:-

சபையின் அனுமதியோடு தற்காலிக அடிப்படையில் பதில் தொழிலாளி நியமனத்தைப் பெற்று கடமையாற்றி வருகின்ற உத்தியோகத்தர்களில் கீழ் விபர ஊழியர்களின் சேவைக்காலம் அவர்களது பெயருக்கு நேராக குறிப்பிடப்பட்டுள்ள திகதியுடன் முடிவடைகின்ற நிலையில் அவரது சேவைக் காலத்தை மேலும் 6 மாத காலத்திற்கு நீடித்தல் தொடர்பில், "அவரது சேவைக் காலம் நீடித்து வழங்கப்படும் பட்சத்தில் அவர் ஈடுபடுத்தப்படவுள்ள கடமை தொடர்பாக நிர்வாக தரப்பினரால் வழங்கப்படும் அறிக்கை மாநகர முதல்வரினால் அங்கீகரிக்கப்படும் பட்சத்தில் மாத்திரமே அத்திகதி முதலாக அவருக்கான சேவை நீடிப்பு நிர்வாக தரப்பினரால் வழங்கப்படல் வேண்டும்" என்ற நிபந்தனையுடன் அவரது கோரிக்கைக்கு ஏற்பவும், சபையின் அவ்வப் போதான தேவை கருதியும் அவர்கள் இருவரது சேவைக் காலத்தையும் மேலும் 06 மாத காலத்திற்கு நீடிப்பு செய்து கொள்வதற்கான **சபை அனுமதியினைப்** பெறும் பொருட்டு நிதிக் குழுவினால் ஏகமனதான சிபார்சு செய்யப்பட்டு இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

| இல | ஊழியரின் பெயர் | நியமனத் திகதி | இறுதியாக வழங்கப்பட்டுள்ள சேவைக் கால நீடிப்புத் திகதி | சேவை முடிவுறுத்தப் படவுள்ள திகதி |
|---|---|---|---|---|
| | **பதிலீட்டு சுகாதாரத் தொழிலாளி** | | | |
| 01 | திரு. சிவபாலசுப்பிரமணியம் நிலக்சன் | 03.09.2018 | 03.10.2021 – 02.04.2022 | 03.04.2022 |
| 02 | திரு.தம்பிப்பிள்ளை தில்லைநாதன் | 03.09.2018 | 03.10.2021 – 02.04.2022 | 03.04.2022 |
| 03 | திரு.சோமசுந்தரம் சுந்தரராஜன் | 03.09.2018 | 03.10.2021 – 02.04.2022 | 03.04.2022 |
| 04 | திரு.நிமலச்சந்திரன் தனுராஜ் | 03.09.2018 | 03.10.2021 – 02.04.2022 | 03.04.2022 |
| 05 | திரு.சிவயோகநாதன் கிசோக் | 03.09.2018 | 03.10.2021 – 02.04.2022 | 03.04.2022 |
| 06 | திரு.தருமதாஸ் லியோகாந்த் | 03.09.2018 | 07.10.2021 – 06.04.2022 | 07.04.2022 |
| 07 | திரு.அலெக்ஸ் மயூரன் | 03.09.2018 | 07.10.2021 – 06.04.2022 | 07.04.2022 |
| 08 | திரு.சேனாபதி செந்துாரன் | 03.09.2018 | 07.10.2021 – 06.04.2022 | 07.04.2022 |
| 09 | திரு.தவராசா கவிதாசன் | 03.09.2018 | 07.10.2021 – 06.04.2022 | 07.04.2022 |
| 10 | திரு.ஞானசெல்வம் ஞானராஜ் | 03.09.2018 | 07.10.2021 – 06.04.2022 | 07.04.2022 |
| 11 | திரு.ரங்கசாமி புஸ்பகுமார் | 03.09.2018 | 07.10.2021 – 06.04.2022 | 07.04.2022 |
| 12 | திரு.நாராயணசாமி கமலராஜன் | 03.09.2018 | 07.10.2021 – 06.04.2022 | 07.04.2022 |
| 13 | திரு. உதயசுதன் வினோத் | 03.09.2018 | 07.10.2021 – 06.04.2022 | 07.04.2022 |
| 14 | திரு.கிருபைராஜன் யூலியன் | 03.09.2018 | 07.10.2021 – 06.04.2022 | 07.04.2022 |
| 15 | திரு.சண்முகநாதன் கோணேஸ்வரன் | 03.09.2018 | 07.10.2021 – 06.04.2022 | 07.04.2022 |
| 16 | திரு.சுதாகரன் சுகிர்தராஜ் | 03.09.2018 | 07.10.2021 – 06.04.2022 | 07.04.2022 |
| 17 | திரு.லிங்கநாதன் இலங்கேஸ்வரன் | 03.09.2018 | 07.10.2021 – 06.04.2022 | 07.04.2022 |
| 18 | திரு.முனிசாமி கனிஸ்ரன் | 03.09.2018 | 07.10.2021 – 06.04.2022 | 07.04.2022 |
| 19 | திரு.லோகேஸ்வரன் சாந்தகுமார் | 03.09.2018 | 07.10.2021 – 06.04.2022 | 07.04.2022 |
| 20 | திரு.யோகதாஸ் லியோன் | 03.09.2018 | 07.10.2021 – 06.04.2022 | 07.04.2022 |
| 21 | திரு.ரெட்ணம் யுவராஜ் | 03.09.2018 | 07.10.2021 – 06.04.2022 | 07.04.2022 |
| 22 | திரு.ஜெகராஸ் பிரதாஸ் | 03.09.2018 | 07.10.2021 – 06.04.2022 | 07.04.2022 |
| 23 | திரு.செல்வம் கௌதமன் | 03.09.2018 | 07.10.2021 – 06.04.2022 | 07.04.2022 |
| 24 | திரு.வின்சன்ட் டிபோல் சியாம் | 17.09.2018 | 26.10.2021 – 25.04.2022 | 26.04.2022 |
| 25 | திரு.துரைராஜசிங்கம் திவ்யராஜ் | 17.09.2018 | 26.10.2021 – 25.04.2022 | 26.04.2022 |
| | **பதிலீட்டு வேலைத் தொழிலாளி** | | | |
| 26 | திரு.சண்முகநாதன் ராகுலன் | 09.10.2020 | 14.10.2021 – 13.04.2022 | 14.04.2022 |

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், இவர்களுடன் பதில் வேலைத் தொழிலாளியான திரு.அ.ஜனாத்தன் மற்றும் பதில் சுகாதாரத் தொழிலாளியான திரு. செல்வராஜா ஆகியோரது சேவைக்கால நீடிப்பினையும் அவர்களது சேவைக் காலம் முடிவுற்ற திகதி முதலாக உரிய நிர்வாக நடைமுறைக்குட்பட்டு நீடித்து கொள்வதற்கான அனுமதியையும் சபை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

கௌரவ பிரதி முதல்வர் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, கடந்த 3ந் திகதி சில ஊழியர்களது சேவைக் காலம் முடிவுறுத்தப்பட்டுள்ளது. இன்று 7ம் திகதி. இன்று நாட்டில் இருக்கின்ற பொருளாதாரப் பிரச்சனை நாங்கள் எல்லோரும் அறிந்ததே அவர்களுக்கு எங்களது சட்ட வரையறைக்கு ஏற்றாற் போல் அவர்களது சேவை முடிவுறும் திகதியிலிருந்து ஒரு நாள் அவர்களை நிறுத்தி அடுத்த நாள் அவர்களது வேலையை வழங்குவதற்கு ஏதுவான

நடவடிக்கையை மேற்கொண்டு மீள் நியமனத்தை வழங்க வேண்டும். கடந்த காலங்களில் இவ்வாறு தான் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இவை இன்று 7ந் திகதி சபைக்கு வந்துள்ளது. நான் நினைக்கின்றேன் கடிதம் வழங்க எப்படியும் இரண்டு மூன்று நாட்கள் செல்லும். எனவே நாங்கள் ஒரு பொதுவான தீர்மானத்தினை எடுத்து வைப்போமாக இருந்தால் அவர்களது நியமனம் முடிவுறுத்தப்பட்டதும் ஒரு நாள் நிறுத்தப்பட்டு அடுத்த நாள் தொடர்ச்சியாக நியமனத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். எனவே பொதுவான தீர்மானம் ஒன்றினை எடுத்துக் கொடுத்தால் அதனை அவர்களது மீள் நியமனக் கடிதங்களை நேரடி மேற்பார்வையாளர், ஆணையாளர் ஆகியோரது சிபாரிசுடன் முதல்வர் வழங்கலாம் என நான் நினைக்கின்றேன்.

இதற்கு கௌரவ முதல்வர் அவர்கள் பதிலளிக்கையில், இதற்கு முன்னய காலங்களில் சேவை முடிவுறுத்துவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே சபையில் அவர்களுக்கான நீடிப்பு அனுமதிகள் பெறப்பட்டு இருந்தது. தற்போது தான் இது காலம் தாழ்த்தி வழங்கப்படுகின்றது. எனவே எதிர்காலத்தில் அனுமதியினை முன்கூட்டியே கோரும் பட்சத்தில் அதற்கான அனுமதி முதல் மாதத்திலேயே வழங்கப்படலாம் எனத் தெரிவித்ததார்.

கௌரவ பிரதி முதல்வர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, பல தொழிலாளர்கள் வேலை இடை நிறுத்தப்பட்டிருக்கின்றனர். அதில் ஒரு தொழிலாளியைத் தவிர ஏனைய எல்லோருக்கும் வேலை வழங்கப்பட்டுள்ளது. என நினைக்கின்றேன். இதில் திரு.இ.சுதர்சன் எனும் சாரதி கடந்த 7 மாதங்களாக தொழில் இழந்த நிலையில் இருக்கின்றார். அவர் தான் வேறு எந்த வேலைக்கும் செல்ல வில்லை எனவும், தனது குடும்பம் மிகவும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளது எனவும் எனக்குத் தெரிவித்துள்ளார். எனவே அந்த தொழிலாளிக்கு மீள் நியமனத்தினை வழங்க வேண்டும் என்கின்ற ஒரு வினயமான வேண்டுகோளை நான் இந்த உயரிய சபையில் முன்வைக்கின்றேன். எமது மாநகர சபைக்காக இரவு பகல் பாராது கடமையாற்றிய ஒரு தொழிலாளி இன்று வேதனைப்பட்டு வீதியில் நிற்கின்ற ஒரு அவலநிலை காணப்படுகின்றது. நான் இன்று காலையில் வருகின்ற போது கூட அலுவலகத்திற்கு முன்பாக நின்று இன்றாவது எனது நியமனத்தினைப் பெற்றுத் தாருங்கள் என உருக்கமான வேண்டுதலை முன் வைத்தார். எனவே இன்று நாங்கள் இந்த உயரிய சபையில் இவ்நியமனத்தினை வழங்குவதற்கான அனுமதியினை முதல்வரது சம்மதத்துடன் மேற்கொண்டு வழங்க எல்லோரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அன்பாகக் கேட்டுக் கொள்வதாகத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலளிக்கையில், மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நிதிக்குழுவின் அனுமதியினைப் பெற்று அடுத்த சபையில் அதற்கான சபை அனுமதினையும் அவரிடமிருந்து மன்னிப்புக் கோரும் கடிதங்களையும் பெற்றுக் கொண்டு இவருக்கான நீடிப்பு நியமனத்தினை வழங்க நடவடிக்கை எடுப்போம் எனத் தெரிவித்தார்.

இதன் போது மீண்டும் கௌரவ பிரதி முதல்வர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், நாங்கள் நிதிக் குழுவில் இதனைப் பற்றி ஆராய்வோம். ஆனால் அடுத்த மாதம் சபையில் அதற்கான தீர்மானம் எடுக்கும் வரை அவரது வாழ்வாதாரம் எவ்வாறு போகும்? தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சனை யாவரும் அறிந்ததே. எனவே நாங்கள் இன்று சபையின் அனுமதியினைப் பெற்று விட்டு நிதிக்குழுவின் அனுமதியினையும் பெற்று நீங்கள் கூறியது போன்று அவரிடம் இருந்து எழுத்து மூலமான ஆவணங்களையும் பெற்று விட்டு அவரது நியமனத்தினை வழங்கலாம் என நினைக்கின்றேன்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலளிக்கையில், நிருவாக ரீதியான விடயங்களைப் பார்க்கும் போது நிதிக்குழுத் தீர்மானத்தினை எடுத்த பின்பு தான் சபை அனுமதியினப் பெற வேண்டும் என்பதாகும். ஆனால் இங்கு இந்த நடைமுறையினை தலைகீழாக செய்வது என்பதை நிருவாக ரீதியில் சரியானதா எனப் பார்க்க வேண்டும் எனவும் கூறினார்.

இதன் போது கௌரவ உறுப்பினர் திரு.விஜயகுமார் பூபாலராஜா அவர்கள் பேசுகையில், இன்று இந்த மாநகர சபைக்கு ஒளி கொடுப்பதற்காக இங்கு வருகை தந்துள்ள மாநகர ஆணையாளர் அவர்களை வரவேற்றுக் கொண்டு, இன்று உண்மையில் சபையில் பலருக்கு வேலை வாய்ப்பு புதுப்பிக்கப்படுகின்றது. குறிப்பாக உடைந்த வீதிகள் செப்பனிடப்பட வேண்டிக் காணப்படுகின்றது. எனவே அதற்காக அந்த இரண்டு பேரை நாங்கள் நேர்முகப் பரீட்சை ஊடாக தெரிவு செய்து இருந்தோம். அவர்கள் தற்போது சேவை இடைநிறுத்தப்பட்ட நிலையில் இருக்கின்றனர். அவர்கள் மீள இணைக்கப்பட்டால் சபையின் JCB, Roller போன்ற வாகனங்களைச் செலுத்துவதற்கான அங்கீகாரத்தினையும் சபையில் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதன் போது கௌரவ உறுப்பினர் திரு.கிளனி வசந்தகுமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், இன்று இந்த மாநகர சபைக்கு புதிதாக வருகை தந்துள்ள மாநகர ஆணையாளர் அவர்களுக்கு எனது காலை வணக்கம். இன்று இந்த சபையில் சேவை இடை நிறுத்தப்பட்டு இருக்கின்ற ஊழியர்களுக்கு சேவை நீடிப்பு வழங்குவது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. இன்று இந்த திரு.இ.சுதர்சன் என்கின்ற தொழிலாளி தனது கஷ்டத்தினை வெளிப்படுத்திய பின்பு தான் இன்று கௌரவ பிரதி முதல்வர், கௌரவ உறுப்பினர் திரு.விஜயகுமார் பூபாலராஜா ஆகியோர் அதனைப் பற்றி கதைத்தனர். இன்று திரு.அ.ஜனாத்தன் எனும் வேலைத் தொழிலாளி ஏற்கனவே ஒரு பிரச்சனைக்கு உட்படு இருந்தவர். அவரது சேவை நீடிப்பானது நிதிகுழுவிற்கு சமர்பிக்கப்பட்டு தற்போது சபை அனுமதிக்காக கொண்டு வரப்பட்டுள்ளது. ஆனால் அந்த உறுப்பினர்கள் இவரது கஷ்ட நிலமையினை உணர்ந்து இருந்தால் இவர்களது நியமனத்தினையும் நிதிக் குழுவிற்கு கொண்டு சென்று ஒரு அங்கீகாரத்தினை இன்று சபையில் பெற்று அவருக்கான நியமனத்தினை வழங்கி இருக்கலாம். அனால் சிலரது சுய இலாபங்களுக்காக பிளவுபட்ட நிருவாகத்தினால் இன்று பல பதில் ஊழியர்கள் மட்டுமன்றி நிரந்தர ஊழியர்களும் கூட பாதிக்கப்பட்டு இருக்கின்றனர். சில வார்த்தைப் பிரயோகங்களினால் சிலர் தங்களது தொழிலை விட்டு வெளியேறி இருந்தனர்.இன்று அந்த நிலை மாற்றப்பட்டுள்ளது. அது அனைவருக்கும் நல்லதாக அமைந்துள்ளது. எனவே நிருவாக நடைமுறைகளுக்கு உட்பட்டு திரு.இ.சுதர்சன் எனும் தொழிலாளிக்கு மீள் நியமனத்தினை வழங்குமாறு நான் ஆனித் தரமாக கேட்டுக் கொள்வதாகக் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், இதனை ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

மேல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெயருடைய ஊழியர்களின் சேவைக்காலம் முறையே 2022 ஏப்பிரல் மாதத்தில் முடிவடைகின்ற நிலையில் அவர்களது சேவைக் காலத்தை மேலும் 6 மாத காலத்திற்கு நீடித்தல் தொடர்பில், “அவர்களது சேவைக் காலம் நீடித்து வழங்கப்படும் பட்சத்தில் அவர்கள் ஈடுபடுத்தப்படவுள்ள கடமைகள் தொடர்பில் அவர்களுக்கான நேரடி மேற்பார்வையாளரின் சிபார்சுடன் நிர்வாக தரப்பினரால் வழங்கப்படும் அறிக்கையின் அடிப்படையில் அவர்கட்கான சேவைக்காலம் மாநகர முதல்வரினால் அங்கீகரிக்கப்படும் பட்சத்தில் மாத்திரமே அத்திகதி முதலாக அவர்கட்கான சேவை நீடிப்புக் கடிதம் நிர்வாக தரப்பினரால் வழங்கப்படல் வேண்டும்” என்ற நிபந்தனையுடன், அவர்களுக்கு மேலதிகமாக திரு.அ.ஜனாத்தன் (பதில் வேலைத் தொழிலாளி) மற்றும் திரு.செல்வராசா (பதில் சுகாதாரத் தொழிலாளி) ஆகியோரின் ஒப்பந்த சேவைக் காலம் ஏலவே முடிவடைந்துள்ள போதிலும் நிர்வாக தரப்பினரால் அவர்களது சேவைக் காலம் முடிவுறுத்தப்பட்டு கடிதம் வழங்கப்படாததன் காரணமாக அவர்கள் தொடர்ச்சியாக கடமையாற்ற சமூகமளித்து வருவதும், நாட்டில் தற்போது எழுந்துள்ள பொருளாதார பிரச்சனையையும் கவனத்தில் கொண்டும் அவர்களது சேவைக் காலத்தையும் மேற்குறித்த நிபந்தனைகளுக்கும் உரிய நிதி மற்றும் நிர்வாக நடைமுறைகட்கும் உட்பட்டதாக மொத்தமாக 28 பதில் தொழிலாளர்களின் சேவைக் காலத்தை மேலும் 06 மாத

காலத்திற்கு நீடிப்பு செய்து கொள்வதற்கு பின்வருவோர் முன்மொழிந்து வழிமொழிய சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு.செல்வராசா குமார் .**
**வழி மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திருமதி.சிவாகரன் சுலக்ஷனா..**

2. **திரு.இ.நந்தகுமார், பொது சுகாதாரப் பரிசோதகர் அவர்களது ஒப்பந்த சேவைக்கால நீடிப்புக்கான அனுமதி.**

சபையில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றி வருகின்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு.இ.நந்தகுமார் அவர்களது ஒப்பந்த சேவைக் காலமானது கடந்த 31.03.2022ந் திகதியுடன் நிறைவு பெறுகின்ற நிலையில், தனக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்த சேவைக் காலத்தை மேலும் நீடித்துத் தருமாறு கோரி அவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடிதம் நிதிக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு, சபைக்குக் கிடைக்கின்ற சுகாதாரம் சம்பந்தப்பட்ட முறைப்பாடுகள் அனைத்தையும் பரிசீலித்து அறிக்கையிடுதல், கால்நடை வைத்தியர் வருகை தராத சந்தர்ப்பத்தில் கொல்களப் பரிசீலனையை மேற்கொள்ளல் போன்ற கடமைகளை இவரே நிறைவேற்றி வருகின்றமையை கவனத்தில் கொண்டு இவரது ஒப்பந்த சேவைக் காலத்தை 01.04.2022ந் திகதி முதலாக மேலும் 03 மாத காலத்திற்கு (30.06.2022 வரை) தற்போது அவருக்கு வழங்கப்பட்டு வருகின்ற அதே கொடுப்பனவுடன் உரிய நிதி, நிர்வாக நடைமுறைக்குட்பட்டு நீடித்துக் கொள்வதற்கான சபையின் அனுமதியை பெறும் பொருட்டு நிதிக்குழுவினால் ஏகமனதாக சிபார்சு செய்யப்பட்டு இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை அவர்கள் பேசுகையில், இவரது சேவை திருப்திகரமானதாக உள்ளதாலும், மாநகர சபைக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் தேவை என்பதனாலும் அவருக்கான கால நீடிப்பினை வழங்கலாம் எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் இதனை ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

சபையில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றி வருகின்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு.இ.நந்தகுமார் அவர்களது ஒப்பந்த சேவைக் கால நீடிப்புக் கோரிக்கையை, சபைக்குக் கிடைக்கின்ற சுகாதாரம் சம்பந்தப்பட்ட முறைப்பாடுகள் அனைத்தையும் பரிசீலித்து அறிக்கையிடுதல், கால்நடை வைத்தியர் வருகை தராத சந்தர்ப்பத்தில் கொல்களப் பரிசீலனையை மேற்கொள்ளல் போன்ற கடமைகளை அவர் தொடர்ந்து நிறைவேற்றி வருகின்றமையை கவனத்திற் கொண்டு நிதிக் குழுவின் சிபாரிசுக்கமைவாக இவரது ஒப்பந்தச் சேவைக் காலத்தை 01.04.2022ந் திகதி முதலாக மேலும் 03 மாத காலத்திற்கு (30.06.2022 வரை) தற்போது அவருக்கு வழங்கப்பட்டு வருகின்ற அதே கொடுப்பனவுடன் உரிய நிதி, நிர்வாக நடைமுறைக்குட்பட்டு நீடித்துக் கொள்வதற்கு பின்வருவோர் முன்மொழிந்து வழிமொழிய சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு. ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை.**
**வழி மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு. செல்வராசா குமார்.**

3. **<u>மாநகர சபையின் யாட் பகுதி மற்றும் மாநகர வளாகத்தின் சில இடங்களுக்கும் கண்காணிப்பு கமரா பொருத்துதல்.</u>**

மாநகர சபையின் யாட் பகுதியையும், சபை வளாகத்தின் சில பகுதிகளையும் முழுமையான கண்காணிப்பு உட்படுத்தும் வகையில் தேவையான இடங்களில் புதிய கமராக்களை பொருத்தவும், பழுதடைந்துள்ள அல்லது சேதமடைந்துள்ள கமராக்களை திருத்தம் செய்து கொள்வதற்காகவும் Micro Channel Lanka (Pvt) Ltd நிறுவனத்திடமிருந்து 23.02.2022ந் திகதியிடப்பட்டு பெறப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூபா.1,200,000/- இன் அடிப்படையில் அதனை உரிய பெறுகை மற்றும் நிதி நிர்வாக நடைமுறைக்குட்பட்டவாறு செய்து கொள்வதற் சபையின் அனுமதியை பெறும் பொருட்டு நிதிக்குழுவினால் ஏகமனதாக சிபார்சு செய்யப்பட்டு இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

கௌரவ உறுப்பினர் திரு.சிவம் பாக்கியநாதன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, நகர்ப் பகுதியை எடுத்துக் கொண்டால் பிரதான வீதிகளின் சந்திகளில் எமது குடியிருப்பாளர்கள் குப்பைகளை கொண்டு சென்று வீசுகின்றனர். இது தொடர்ச்சியான பாரிய பிரச்சனையாகவுள்ளது. எமது சுகாதாரக் குழுவினாலும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு பல முயற்சிகள் எடுத்தும் அதனைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றினை தாக்கல் செய்த போது கூட இது மாநகர சபைக்குரிய வேலை இதனை அவர்கள் சரியாகச் செய்யாதுள்ளனர் என தெரிவித்து வழக்கினை ஏற்றுக் கொள்ளாத நிலை காணப்படுகின்றது. எனவே இதனை கண்டறிவதற்காக வீதிகளில் கண்காணிப்புக் கமராக்களைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்வதாக கூறினார்.

கௌரவ உறுப்பினர் திரு.விஜயகுமார் பூபாலராஜா அவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது, யாட் பகுதியில் புறாக் கூடு போன்ற ஓர் கூடு அமைக்கப்பட்டுள்ளது. இது இருப்பதனால் யாட் பகுதியில் என்ன நடை பெறுகின்றது என்ற விபரம் கமரக்களில் தெளிவாகத் தெரிவதில்லை. இங்கு என்ன நடை பெறுகின்றது என்ற விபரம் கமரா மூலம் தெரிய வேண்டும். எனவே இதனை அகற்றிக் கொள்வதற்கான ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.செல்வராசா குமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது, கௌரவ முதல்வர் அவர்களே, மற்றும் ஆணையாளர் உட்பட அனைவருக்கும் வணக்கம். இங்கு கமரா பொருத்துவது தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போது யாட் பகுதியில் ஒரு பகுதி அடைத்து இருப்பதாக குறிப்பிடப்பட்டு இருந்தார்கள். ஏன் அது அடைக்கப்பட்டுள்ளது? என்பதனை ஆராய்ந்து பார்த்து விட்டு அதைச் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன். ஏனென்றால் அது ஏதாவது ஒரு காரணத்துக்காக செய்யப்பட்டதாகவும் இருக்கலாம் எனவும் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது, இங்கு பேசப்படும் கமரா பொருத்தும் விடயம் தொடர்பாக யாட் பகுதியில் பல தவறான சம்பவங்கள் இடம் பெற்றதுடன், பல பொருட்கள் களவாடப்பட்ட சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. கௌரவ உறுப்பினர் திரு.சிவம் பாக்கியநாதன் அவர்கள் தெரிவித்தது போன்ற Mobile CCTV கமரா பொருத்துவது தொடர்பான நடவடிக்கை 2 வருடங்களுக்கு முன்பே மேற்கொள்ளப்பட்டதுடன், இதற்காக சுமார் 82,000/- ரூபா செலவில் கமரா தயாரிக்கப்பட்டதுடன், இது பிரதி ஆணையாளருக்கு கையளிக்கப்பட்டும் இருந்தது. இது வெற்றியளிக்கும் பட்சத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் அதனைப் பொருத்துவதற்கான தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. இது எமது பிரதி ஆணையாளரின் வினைத்திறனற்ற செயற்பாட்டின் காரணமாக இதுவரை

செயற்படுத்தப்படவில்லை. இதனை எமது ஆணையாளர் நிருவாக நடைமுறைகளுக்கு உட்பட்டு செயற்படுத்தினால் அது வெற்றியளிக்கும் பட்சத்தில் நாாங்கள் அதனை ஒவ்வொரு சுகாதாரப் பிரிவிற்கும் பொருத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள முடியும். அதனை வைத்து ஆதாரபூர்வமாக சட்டத்திற்கு முரணான வகையில் வீதிகளில் குப்பைகளை கொட்டுபவர்களை பிடித்து சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் தெரிவித்தார். மேலும் ஆணையாளரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தேவை என்று எங்களிடம் கேட்டிருந்தார். ஏற்கனவே சுகாதாரப் பரிசோதகர்களுடன் ICT தொழிநுட்பத்தினையும் பயன்படுத்தும் போது இதனை மிகவும் திறமையாக நடைமுறைப்படுத்த முடியும் என நினைக்கின்றேன் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு. பேரின்பசாமி சுரேஸ்குமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், CCTV கமரா பொருத்துவது பற்றிய ஆலோசனைக்கு நன்றிகள். ஆரம்பத்தில் கல்லடிப் பாலத்தில் CCTV கமரா பொருத்துவதாக குறிப்பிடப்பட்டு இருந்தது. இதுவரை பொருத்தப்படவில்லை. கல்லடிப் பாலத்தில் பொருத்தப்பட்டுள்ள கம்பிகளை இரவோடு இரவாக அறுத்துக் கொண்டு போய் நாடான் கடையில் கொடுக்கின்ற நிலமை காணப்படுகின்றது. எனவே இதனையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெட்ணராஜா திலீப்குமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, எமது திருமலை வீதியில் Signal Light இருக்கும் இடத்தில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் நேரத்தில் பொலிசார் கடமையில் நின்று பொது மக்களது போக்குவரத்தினை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளை செய்ய வேண்டும். அதேபோன்று பொதுமக்கள் அதிகமாக நடமாடும் இடங்களிலும் இந்த நடைமுறையினைப் பின்பற்றி செயற்படுவதற்கான ஏற்பாட்டினை மேற்கொள்வதற்கு உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.துரைசிங்கம் மதன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, புதிதாக கடமையேற்றுள்ள மாநகர ஆணையாளர் அவர்களை வரவேற்பதுடன் அவருக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெட்ணராஜா திலீப்குமார் அவர்கள் குறிப்பிட்டது போன்று, சன நெரிசலான இடங்களில் போக்குவரத்துப் பொலிசாரை சேவையில் ஈடுபடுத்துவதற்கான ஏற்பாட்டினை கட்டயமாக மேற்கொள்ள வேண்டும். அத்துடன் களவுகளும், கொலைச் சம்பவங்களும் இடம் பெறுகின்றன. எனவே இதனை சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினரும் சுகாதாரக் குழுத் தலைவருமான திரு. கந்தசாமி ரகுநாதன் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, வீதிகளில் குப்பை, கழிவுகளை வீசுவது தொடர்பாக பொது மக்களுக்கு ஒலி பெருக்கி மூலம் ஓர் அறிவித்தலை அவர்களது விழிப்புணர்வுக்காக முதலில் வழங்கலாம் என ஆலோசனை தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு. சிவம் பாக்கியநாதன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது, கல்லடிப் பாலத்தில் உள்ள கம்பியினை அறுத்து எடுப்பதாக கௌரவ உறுப்பினர் திரு.பேரின்பசாமி சுரேஸ்குமார் இங்கே குறிப்பிட்டார். கல்லடிப் பாலம் என்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு. இடம். அந்தப் பாலத்தினை பாதுகாப்பது மட்டக்களப்பில் உள்ள பொது மக்கள் அனைவருக்கும் உள்ள சமூகப் பொறுப்பாகும். எனவே இதனைச் செய்பவர்களை உடனடியாக பொலிசாருக்கு

அறிவித்து அதற்கான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்ததுடன், மேலும் மின்சாரத் துண்டிப்பு உள்ள காலப் பகுதியில் மாநகர சபைக்கு அதிகளவான வருமானத்தினை பெற்றுத் தருகின்ற பெரிய இடமான எமது பொதுச் சந்தையில் களவு இடம் பெறாது அதனைப் பாதுகாப்பதற்கு காவலாளிகள் இரண்டு பேர் தேவை எனவும் அதற்கான அனுமதியினை வழங்குவதற்கான ஒரு தீர்மானத்தினை மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.துரைசிங்கம் மதன் அவர்கள் பேசுகையில், உண்மையில் நல்ல விடயங்களைப் பாராட்ட வேணடும். அண்மையில் நடை பெற்ற ஒரு விடயம். புதிதாக அமைக்கப்பட்ட பூங்கா ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த வாயிற் கதவை திருடன் களவு எடுத்துச் செல்லும் போது அதனை எமது கௌரவ உறுப்பினர் திருமதி.சசிகலா விஜயதேவா அவர்கள் தற்றுணிவுடன் சென்று அதனைத் தடுத்து பறிமுதல் செய்து எடுத்து வந்துள்ளார். இது பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகும் எனவும் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் இதனை ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

மாநகர சபையின் யாட் பகுதியையும், சபை வளாகத்தின் சில பகுதிகளையும் முழுமையான கண்காணிப்பு உட்படுத்தும் வகையில் தேவையான இடங்களில் புதிய கமராக்களை பொருத்தவும், பழுதடைந்துள்ள அல்லது சேதமடைந்துள்ள கமராக்களை திருத்தம் செய்து கொள்வதற்காகவும் Micro Channel Lanka (Pvt) Ltd நிறுவனத்திடமிருந்து 23.02.2022ந் திகதியிடப்பட்டு பெறப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூபா.1,200,000/- இன் அடிப்படையில் அதனை உரிய பெறுகை மற்றும் நிதி நிர்வாக நடைமுறைக்குட்பட்டவாறு செய்து கொள்வதற்கு நிதிக் குழுவினால் வழங்கப்பட்ட சிபார்சின் அடிப்படையில் பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன்மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.சீனித்தம்பி ஜெயந்திரகுமார்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.கந்தசாமி ரகுநாதன்.**

## 4. மாநகர சபையின் அபிவிருத்தி வேலைக்கான ABC Mixure கொள்வனவு.

மாநகர சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி வேலைகளின் பாவனைக்குத் தேவையானதென கேள்விச் சபைத் தீர்மானத்திற்கமைவாக மெற்கொள்ளப்பட்ட கீழ் விபரப்படியான ABC Mixure கொள்வனவினால் ஏற்பட்ட செலவு மொத்தம் ரூபா. 344,100/- இனை உரிய நிதி நிர்வாக நடைமுறைக்குட்பட்டதாக வினியோகத்தரான உதயா கொன்ஸ்ரக்சன் நிறுவனத்தினர்க்கு கொடுத்துத் தீர்ப்பதற்கான சபையின் அனுமதியை பெறும் பொருட்டு நிதிக்குழுவினால் ஏகமனதாக சிபார்சு செய்யப்பட்டு இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

| Name of Item | Qty | Rate | Amount |
|---|---|---|---|
| ABC Mixure | 12 Cubes | 9,300.00 | 111,600.00 |
| ABC Mixure | 25 Cubes | 9,300.00 | 232,500.00 |
| **TOTAL** | | | **344,100.00** |

கௌரவ முதல்வர் அவர்கள் இது தொடர்பில் கருத்துக்கள் இல்லாதவிடத்து இதனை ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

மாநகர சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி வேலைகளின் பாவனைக்குத் தேவையானதென கேள்விச் சபைத் தீர்மானத்திற்கமைவாக மேற்கொள்ளப்பட்ட மேல் விபரப்படியான ABC Mixure கொள்வனவினால் ஏற்பட்ட செலவு மொத்தம் ரூபா. 344,100/- வினை உரிய நிதி நிர்வாக நடைமுறைக்குட்பட்டதாக அதன் வினியோகத்தரான உதயா கொன்ஸ்ரக்சன் நிறுவனத்தினர்க்கு கொடுத்துத் தீர்ப்பதற்காக நிதிக்குழுவினால் வழங்கப்பட்ட சிபார்சின் அடிப்படையில் பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன் மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.மயில்வாகனம் ரூபாகரன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. சீனித்தம்பி ஜெயந்திரகுமார்.**

## 5. மாநகர சபையின் அபிவிருத்தி வேலைக்கான Bitumen 80/100 கொள்வனவு.

மாநகர சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி வேலைகளின் பாவனைக்குத் தேவையானதென கேள்விச் சபைத் தீர்மானத்திற்கமைவாக மேற்கொள்ளப்பட்ட கீழ் விபரப்படியான Bitumen 80/100 கொள்வனவினால் ஏற்பட்ட செலவு மொத்தம் ரூபா. 1,233,000/- இனை உரிய நிதி நிர்வாக நடைமுறைக்குட்பட்டதாக வினியோகத்தரான GKUC International Pvt Ltd நிறுவனத்தினர்க்கு கொடுத்துத் தீர்ப்பதற்கான சபையின் அனுமதியை பெறும் பொருட்டு நிதிக்குழுவினால் ஏகமனதாக சிபார்சு செய்யப்பட்டு இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

| Name of Item | Qty | Rate | Amount |
|---|---|---|---|
| Bitumen 80/100 | 50 Barrels | 24,660.00 | 1,233,000.00 |
| **TOTAL** | | | **1,233,000.00** |

கௌரவ முதல்வர் அவர்கள் இது தொடர்பில் கருத்துக்கள் இல்லாதவிடத்து இதனை ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

மாநகர சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி வேலைகளின் பாவனைக்குத் தேவையானதென கேள்விச் சபைத் தீர்மானத்திற்கமைவாக மேற்கொள்ளப்பட்ட மேல் விபரப்படியான Bitumen 80/100 கொள்வனவினால் ஏற்பட்ட செலவு மொத்தம் ரூபா. 1,233,000/- இனை உரிய நிதி நிர்வாக நடைமுறைக்குட்பட்டதாக வினியோகத்தரான GKUC International Pvt Ltd நிறுவனத்தினர்க்கு கொடுத்துத் தீர்ப்பதற்காக நிதிக்குழுவினால் வழங்கப்பட்ட சிபார்சின் அடிப்படையில் பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன்மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.மாசிலாமணி தியாகராஜா ஸ்ரீஸ்கந்தராஜா.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திருமதி. பற்றிமா பல்தசார்.**

## 6. மாநகர சபையின் பாவனைக்கான டீசல் கொள்வனவு.

மாநகர சபையின் வாகனங்களின் பாவனைக்குத் தேவையான கீழ் விபரப்படியான Desel கொள்வனவினால் ஏற்பட்ட செலவு மொத்தம் ரூபா. 823,844.08/- இனை உரிய நிதி நிர்வாக நடைமுறைக்குட்பட்டதாக வினியோகத்தரான Ceylon Petrolium Coorporation நிறுவனத்தினர்க்கு கொடுத்துத் தீர்ப்பதற்கான சபையின் அனுமதியை பெறும் பொருட்டு நிதிக்குழுவினால் ஏகமனதாக சிபார்சு செய்யப்பட்டு இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

| Name of Item | Qty | Rate | Amount |
|---|---|---|---|
| Desel (Req No: 6379) | 6600 Ltr | 121.00 | 798,600.00 |
| Transport | | | 25,244.08 |
| **TOTAL** | | | **823,844.08** |

கௌரவ முதல்வர் அவர்கள் இது தொடர்பில் கருத்துக்கள் இல்லாதவிடத்து இதனை ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.
மாநகர சபையின் வாகனங்களின் பாவனைக்குத் தேவையான மேல் விபரப்படியான Desel கொள்வனவினால் ஏற்பட்ட செலவு மொத்தம் ரூபா. 823,844.08/- இனை உரிய நிதி நிர்வாக நடைமுறைக்குட்பட்டதாக வினியோகத்தரான Ceylon Petrolium Coorporation நிறுவனத்தினர்க்கு கொடுத்துத் தீர்ப்பதற்காக நிதிக்குழுவினால் வழங்கப்பட்ட சிபார்சின் அடிப்படையில் பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன்மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.துரைசிங்கம் மதன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. மயில்வாகனம் ரூபாகரன்.**

7. **<u>சந்தைக் கடைகளுக்கான மின்னிணைப்பு பெறல்.</u>**

மட்டக்களப்பு மாநகர சபைக்குச் சொந்தமான கீழ் விபரப்படியான சந்தைக் கடைகளுக்கான புதிய மின் இணைப்பிணை இலங்கை மின்சார சபை ஊடாக பெற்றுக் கொள்வதற்காக கிடைக்கப் பெற்ற உத்தேச மதிப்பீட்டிற்கு அமைவாக உரிய நிதி நிர்வாக அமைவாக மொத்தத் தொகையான ரூபா.408,000/- கொடுப்பனவினை செலுத்தி மின் இணைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கான சபையின் அனுமதியை பெறும் பொருட்டு நிதிக்குழுவினால் ஏகமனதாக சிபார்சு செய்யப்பட்டு இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

| இடம் | கடைகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| மட்டக்களப்பு பொதுச் சந்தை | 13 கடைகள் | 312,000.00 |
| நாவற்குடா பொதுச் சந்தை | 04 கடைகள் | 96,000.00 |
| **மொத்தம்** | | **408,000.00** |

கௌரவ முதல்வர் அவர்கள் இது தொடர்பில் கருத்துக்கள் இல்லாதவிடத்து இதனை ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

மட்டக்களப்பு மாநகர சபைக்குச் சொந்தமான மேல் விபரப்படியான சந்தைக் கடைகளுக்கான புதிய மின் இணைப்பிணை இலங்கை மின்சார சபை ஊடாக பெற்றுக் கொள்வதற்காக கிடைக்கப் பெற்ற உத்தேச மதிப்பீட்டிற்கு அமைவாக உரிய நிதி நிர்வாக அமைவாக மொத்தத் தொகையான ரூபா.408,000/- கொடுப்பனவினை அவர்களுக்கு செலுத்தி மின் இணைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கான நிதிக் குழுவினாலும் வழங்கப்பட்ட சிபார்சுக்கமைய பின்வருவோர் முன்மொழிந்து வழிமொழிய சபையினரால் அனுமதி வழங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன் மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.மயில்வாகனம் நிஸ்கானந்தராஜா.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.அந்தோனி கிருரஜன்.**

## 8. <u>பொதுச் சந்தை துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலைய குத்தகை- 2021.</u>

மேற்படி குத்தகையினைப் பெற்று நடாத்தி வந்த குத்தகைக்காரரான திருமதி.க.கலைவாணி என்பவர் தான் இக் குத்தகையை பெற்ற பின்னர் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த கொரொனா தொற்று காரணமாக தன்னால் குறித்த வாகன பாதுகாப்பு நிலைய அறவீட்டினை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதனால் தன்னால் தற்போது செலுத்த வேண்டியுள்ள குத்தகை நிலுவைத் தொகையான ரூபா.162,500/02னை விலக்களிப்பு செய்து தருமாறு கோரி எழுதப்பட்ட 17.02.2022ந் திகதியிடப்பட்ட கடிதம் பரிசீலிக்கப்பட்டு, அவரால் செலுத்தப்பட வேண்டிய குறித்த நிலுவையானது 03 மாதங்களுக்கானதாக உள்ளதால் அதில் ஒரு மாதத்திற்கான குத்தகைத் தொகையினை உரிய நிதி நிர்வாக நடைமுறைக்குட்பட்டதாக விலக்களிப்பு செய்து கொள்வதற்கும் அதற்கான அனுமதியினை உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து பெற்றுக் பெற்றுக் கொள்வதற்கும், மற்றும் விலக்களிப்புத் தொகை நீங்கலான மீதியான தொகையை குத்தகைக்காரரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பதற்குமான சபை அனுமதியினை பெறும் பொருட்டு நிதிக் குழுவினால் சிபார்சு செய்யப்பட்டு இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

கௌரவ முதல்வர் அவர்கள் இது தொடர்பில் கருத்துக்கள் இல்லாதவிடத்து இதனை ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

மேற்படி விடயம் பரிசீலிக்கப்பட்டு, அவரால் செலுத்தப்பட வேண்டிய குறித்த நிலுவையானது 03 மாதங்களுக்கானதாக உள்ளதால் அதில் ஒரு மாதத்திற்கான குத்தகைத் தொகையினை உரிய நிதி நிர்வாக நடைமுறைக்குட்பட்டதாக விலக்களிப்பு செய்து கொள்வதற்கும் அதற்கான அனுமதியினை உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து பெற்றுக் பெற்றுக் கொள்வதற்கும், மற்றும் விலக்களிப்புத் தொகை நீங்கலான மீதியான தொகையை குத்தகைக்காரரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பதற்குமாக நிதிக் குழுவினால் வழங்கப்பட்ட சிபார்சுக்கும் அமைய பின்வருவோர் முன்மொழிந்து வழிமொழிய சபையினரால் அனுமதி வழங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன்மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.சிவம் பாக்கியநாதன்.**

## 9. மட்/போதனா வைத்தியசாலை துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலைய குத்தகை-2021.

மேற்படி குத்தகையினைப் பெற்று நடாத்தி வந்த குத்தகைக்காரரான திருமதி.க.கலைவாணி என்பவர் தான் இக் குத்தகையை பெற்ற பின்னர் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த கொரொனா தொற்று காரணமாக தன்னால் குறித்த வாகன பாதுகாப்பு நிலைய அறவீட்டினை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதனால் தன்னால் தற்போது செலுத்த வேண்டியுள்ள குத்தகை நிலுவைத் தொகையான ரூபா.868,750/00னை விலக்களிப்பு செய்து தருமாறு கோரி எழுதப்பட்ட 17.02.2022ந் திகதியிடப்பட்ட கடிதம் பரிசீலிக்கப்பட்டு, அவரால் செலுத்தப்பட வேண்டிய குறித்த நிலுவையானது 03 மாதங்களுக்கானதாக உள்ளதால் அதில் இரு மாதத்திற்கான குத்தகைத் தொகையினை உரிய நிதி நிர்வாக நடைமுறைக்குட்பட்டதாக விலக்களிப்பு செய்து கொள்வதற்கும் அதற்கான அனுமதியினை உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து பெற்றுக் பெற்றுக் கொள்வதற்கும், மற்றும் விலக்களிப்புத் தொகை நீங்கலான மீதியான தொகையை குத்தகைக்காரரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பதற்குமான சபை அனுமதியினை பெறும் பொருட்டு நிதிக் குழுவினால் சிபார்சு செய்யப்பட்டு இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

கௌரவ உறுப்பினர் திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், நீதி மன்றத்துக்கு முன்னால் உள்ள வாகனத் தரிப்பிடத்தினை குத்தகைக்குப் பெற்றுக் கொண்டவர்கள் தாங்கள் சட்டரீதியாக பெற்றுக் கொண்ட ஒப்பந்தத்தினை பழைய ஆணையாளர் தன்னிச்சையாக இரத்துச் செய்ததன் காரணமாக தாங்கள் பாதிக்கப்பட்டு இருப்பதாகத் தெரிவித்து அதற்கான கொடுப்பனவினை அவர்கள் மீளக் கோரியுள்ளதாகவும், இதனை தாங்கள் நீதி மன்றத்தினூடாக நடவடிக்கை எடுத்து பெற்றுக் கொள்ளுமாறும் கூறியதாக தெரிவித்தனர். ஆனால் சட்ட ஏற்பாட்டிற்கு அமைவாக இது சரியான முறையா? என வினவினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலிறுத்துப் பேசுகையில், அதாவது ஒரு குத்தகை கொடுக்கப்பட்டு அதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு உரிய சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக வழங்கப்பட்டால் அதனை இரத்துச் செய்ய முடியாது. காரணம் ஒன்றின் நிமித்தம் இரத்துச் செய்வதாயின் அதற்கான உரிய சட்ட ஏற்பாடுகளைப் பின்பற்றித் தான் அதனை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் அவர்கள் மாநகர சபைக்கு பொறுப்பு மாநகர முதல்வர் எனவும், ஒரு பொதுமகன் பாதிக்கப்படக் கூடாது எனவும் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், நிதிக் குழு, பெறுகைக் குழு என்பன தீர்மானம் எடுத்து நாங்கள் தொடர்ந்து குத்தகையினை நடாத்துமாறு அறிவுறுத்தல் வழங்கி இருந்தோம். எனினும் அவர்கள் அதனைச் செய்ய வில்லை எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் இது தொடர்பில் கருத்துக்கள் இல்லாதவிடத்து இதனை ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

மேற்படி விடயம் பரிசீலிக்கப்பட்டு, அவரால் செலுத்தப்பட வேண்டிய குறித்த நிலுவையானது 03 மாதங்களுக்கானதாக உள்ளதால் அதில் இரு மாதத்திற்கான குத்தகைத் தொகையினை உரிய நிதி நிர்வாக நடைமுறைக்குட்பட்டதாக விலக்களிப்பு செய்து கொள்வதற்கும் அதற்கான அனுமதியினை உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து பெற்றுக் பெற்றுக் கொள்வதற்கும், மற்றும் விலக்களிப்புத் தொகை நீங்கலான மீதியான தொகையை குத்தகைக்காரரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பதற்குமான நிதிக் குழுவினால் வழங்கப்பட்ட சிபார்சுக்கும் அமைய பின்வருவோர் முன்மொழிந்து வழிமொழிய சபையினரால் அனுமதி வழங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன் மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. மாசிலாமணி தியாகராஜா ஸ்ரீஸ்கந்தராஜா.**
**வழி மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு.மாசிலாமணி சண்முகலிங்கம்.**

**<u>2022.04.06ம் திகதி புதன்கிழமை இடம் பெற்ற 62வது நிதிக் குழுக் கூட்டத்தில் நிதிக் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்த நிலையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக,</u>**

## 10. துவிச்சக்கர வண்டி கடன் கொடுப்பனவு.

மாநகர சபையில் வேலைத் தொழிலாளியாக கடமையாற்றும் திரு.வி.இராஜசிங்கம் என்பவரால் அவசர தேவை கருதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டி கடன் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு நிதிக் குழுவினால் வழங்கப்பட்ட சிபார்சுக்கமைவாக, குறித்த கடன் கொடுப்பனவை உரிய சுற்றறிக்கை மற்றும் நிதி, நிருவாக நடைமுறைக்கு அமைவாக வழங்குவதற்கான சபை அனுமதியை பெறும் பொருட்டு நிதிக் குழுவினால் சிபார்சு செய்யப்பட்டு இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

கௌரவ முதல்வர் அவர்கள் இது துவிச்சக்கர வண்டிக் கடனுக்கான கோரிக்கையாகும். எனவே இதனை ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

மேற்படி விடயம் பரிசீலிக்கப்பட்டு நிதிக் குழுவினால் வழங்கப்பட்ட சிபார்சுக்கமைவாக, மேற்படி கடன் கொடுப்பனவை உரிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் நிதி, நிருவாக நடைமுறை என்பவற்றுக்கும், நிதிக் குழுவின் சிபார்சிற்கும் அமைவாக திரு.வி.இராஜசிங்கம், வேலைத் தொழிலாளிக்கு வழங்குவதற்கு பின்வருவோர் முன்மொழிந்து வழிமொழிய சபையினரால் அனுமதி வழங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன் மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.அந்தோனி கிருரஜன்**

## 11.EP ZA 9269 (MCB – 104) Arieal Platfoam வாகனத்திற்கான பூரண காப்புறுதி.

மாநகர சபைக்குச் சொந்தமான மேற்படி வாகனத்தின் பூரண காப்புறுதியானது 28.05.2022ந் திகதியுடன் முடிவடைவதன் காரணமாக அதற்கான காப்புறுதித் தொகையான ரூபா.175,034/50னை உரிய நிதி நிர்வாக நடைமுறைக்கு உட்பட்டதாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்திற்கு செலுத்தி காப்புறுதியை புதுப்பித்துக் கொள்வதற்கான சபை அனுமதியை பெறும் பொருட்டு நிதிக் குழுவினால் சிபார்சு செய்யப்பட்டு இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், இது சபை வாகனத்தின் காப்புறுதி புதுப்பித்தலாகும். எனவே இதனை ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

மேற்படி விடயம் பரிசீலிக்கப்பட்டு, மேற்படி வாகனத்தின் பூரண காப்புறுதியானது 28.05.2022ந் திகதியுடன் முடிவடைவதன் காரணமாக அதற்கான காப்புறுதித் தொகையான ரூபா.175,034/50னை உரிய நிதி நிர்வாக நடைமுறைக்கு உட்பட்டதாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்திற்கு செலுத்தி காப்புறுதியை புதுப்பித்துக் கொள்வதற்கு நிதிக் குழுவினால் வழங்கப்பட்ட சிபார்சுக்கமைய பின்வருவோர் முன்மொழிந்து வழிமொழிய சபையினரால் அனுமதி வழங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன் மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.கந்தசாமி ரகுநாதன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திருமதி.சசிகலா விஜயதேவா.**

➢ **கௌரவ முதல்வரின் முன்மொழிவுகள்.**

1) இணைச் செயலாளர், சுதந்திர வர்த்தக வலய மற்றும் பொது சேவைகள் தொழிலாளர் சங்கத்தினரால் "குறை வருமானக் குடும்பங்களுக்கு அத்தியாவசிய பொருட்களை 2020 ஜனவரி மாதம் நிலவி வந்த விலைகளில் வழங்க வேண்டுமென விடுக்கப்படும் வேண்டுகோள்" என்ற விடயமாக 14.03.2022ந் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ள யோசனைக்கு மேலும் வலு சேர்க்கும் வகையில் சபைத் தீர்மானம் ஒன்றினையும் மேற்கொண்டு சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டதற்கு அமைய, அதற்கான தீர்மானம் ஒன்றினை மேற்கொள்வதற்கான சபை அனுமதியினைக் கோரி கௌரவ முதல்வர் அவர்களால் கொண்டு வரப்படும் முன்மொழிவு.

   கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், இப்படி ஒரு தீர்மானத்தினை நிறைவேற்றித்தருமாறு சுதந்திர வர்த்தக வலய மற்றும் பொது சேவைகள் தொழிலாளர் சங்கத்தினரால் கோருகின்றனர். எனவே இதனை நிறைவேற்றுவதற்காக ஒருவர் முன் மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

   கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெத்தினராஜா திலீப்குமார் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, மொத்த விற்பனையாளர்களுக்கும், சில்லறை விற்பனையாளர்களுக்குத் தெரிவிக்க வேண்டும் இலங்கையில் தற்போது டொலரின் விலை அதிகரிப்பினால் பண வீக்கம் அதிகரித்து பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது. இதனால் ஒரு கிழமைக்கு முன்பு கொள்வனவு செய்த பொருட்களைக் கூட அவர்கள் அதிகரித்த விலைக்கே விற்பனை செய்கின்றனர். எனவே இன்றைய நிலையில் அவர்கள் மனச் சாட்சியுடனும், சிறிதளவு இலாபத்துடனும் பொருட்களை விற்பனை செய்ய வேண்டும் என இத்தருணத்தில் கேட்டுக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.

மேற்படி விடயமான தீர்மானம் ஒன்றினை மேற்கொண்டு அனுப்பி வைப்பதற்கான சபை அனுமதியைக் கௌரவ முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்ட முன்மொழிவானது சபையினரால் **ஏகமனதாக** ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2) மாநகர சபை மூலமாக பல்வேறு நிதி அளிப்புகளின் ஊடாக செய்யப்பட்ட வீதி அபிவிருத்தி வேலைகள் பல ஏற்கனவே செய்து முடிக்கப்பட்டுள்ள போதிலும் அதற்கான மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட அவ்வீதிக்கான ஒதுக்கீடு உட்பட ஏனைய விபரங்களை உள்ளடக்கியதான ஓர் பதாதையை காட்சிப்படுத்துவதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டிருந்த போதிலும் குறித்த விடயமானது இதுவரை செய்து முடிக்கப்படவில்லை. எனவே குறித்த வீதிகளில் அந்த வீதி அபிவிருத்தி தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய அறிவித்தல் பலகையை மதிப்பீட்டிற்கு உட்பட்டவாறு உரிய கேள்வி நடைமுறைகளுக்கு உட்பட்டவாறு தகுதியான ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கி அவற்றை விரைவாக செய்து கொள்வதற்கான சபை அனுமதியினைக் கோரி கௌரவ முதல்வர் அவர்களால் கொண்டு வரப்படும் முன்மொழிவு.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், எங்களால் கிட்டத்தட்ட 360 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. அதில் 67 வேலைகளுக்குரிய பதாதைகள் தான் இடப்பட்டுள்ளன. இதில் கம்பரெலிய, சப்ரிகம என்பவற்றிற்கான வேலைகள் மாநகர சபையினால் செய்து முடிவடைந்ததும் அதற்கான அறிவித்தல் பலகைகள் அவ்விடங்களில் இடுவதற்கான நிதி ஒதுக்கீடு பாதீட்டில் உள்ளமையினால் அதனை நாங்கள் செய்து அந்தந்த இடங்ககளில் காட்சிப் படுத்துவோம். எனவே அதற்கான மதிப்பீட்டு அறிக்கையினை தயாரித்து அதற்கமைவாக அவற்றைச் செய்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், எங்களால் ஏற்கனவே போடப்பட்ட வீதிப் பெயர்ப் பலகைகளைப் பாருங்கள். அவை தரமற்றதால் அழிந்தும், பழுதடைந்தும் காணப்படுகின்றது. இதனைச் செய்பவர்கள் எங்களுக்கு அதற்கான Warrenty Periodஐ தர வேண்டும். எனவே இந்த விடயத்தில் இவற்றையும் கவனத்தில் எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.புஸ்பராஜ் ரூபராஜ் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், எங்களால் கடந்த வருடங்களில் செய்து முடிக்கப்பட்ட அதாவது 2021ம் ஆண்டிற்கான வேலைகளுக்கான செலவு விபரங்களை ஆணையாளர் மூலமாக பெற்று வழங்குமாறு கௌரவ முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்வதாக கூறினார்.

கௌரவ உறுப்பினர் திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது, கௌரவ முதல்வர் அவர்களே, மாநகர சபையினால் செய்யப்படுகின்ற ஒப்பந்த வேலைக்கான BOQஇனை வழங்கும் பட்சத்தில் உறுப்பினர்கள் தங்களது வட்டாத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலை விபரங்களை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். எனவே இதனையும் கவனத்தில் எடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

கௌரவ முதல்வர் அவர்கள் இதனை ஒருவர் முன் மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

மேற்படி விடயம் தொடர்பான சபை அனுமதியினைக் கோரி கௌரவ முதல்வர் அவர்களால் கொண்டு வரப்படும் முன்மொழிவானது பின்வருவோர் முன்மொழிந்து வழி மொழிய சபையினரால் அனுமதி வழங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன்மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.சீனித்தம்பி ஜெயந்திரகுமார்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.தம்பிராஜா இராஜேந்திரன்.**

## ➢ கௌரவ உறுப்பினர்களால் கொண்டு வரப்படும் பிரேரணைகள்.

1. கௌரவ பிரதி முதல்வர் திரு.கந்தசாமி சத்தியசீலன் அவர்களால் நாட்டில் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிக்கையிடுகின்ற நிலையிலும், பயங்கரவாத தடுப்புச் சட்டம் என்பது தொடர்ச்சியாக இருந்து வருகின்றமையானது சாதாரண நிலையிலுள்ள அன்றாடம் தமது ஜீவனோபாயத்திற்காக உழைக்கின்ற மக்களுக்கு பெரும் கஸ்டத்தை ஏற்படுத்தி வருகின்றது. எனவே பொது மக்கள் சார்ந்த பல்வேறு நல்ல விடயங்களுக்கு தடையாக இருக்கின்ற பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டும் என அரசினைக் கோரி சபைத் தீர்மானம் ஒன்றினை மேற்கொள்வதற்காக கொண்டு வரப்படும் பிரேரணை.

கௌரவ பிரதி முதல்வர் திரு.கந்தசாமி சத்தியசீலன் அவர்கள் பிரேரணையை முன்வைத்து உரையாற்றுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, மட்டக்களப்பு மாநகர சபைக்குப் புதிதாக கடமையேற்று வந்துள்ள மாநகர ஆணையாளர் திருவாளர் நா.மதிவண்ணன் அவர்களே, நிருவாக உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் அன்பார்ந்த வணக்கம். இலங்கைத் திருநாட்டிலே பயங்கரவாத தடுப்புச்சட்டம் என்பது 1979ஆம் ஆண்டு முதல் 48வது தடுப்புச் சட்டமாக அமுல்படுத்தப்பட்டு வந்தது. இது அப்போது இருந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்களால் சட்டமாக அமுல்படுத்தப்பட்டு வந்தது. அன்று தொடக்கம் இன்று வரை தமிழ் மக்களையும், தமிழ் இளைஞர்களையும் இலக்கு வைத்து கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடுப்புச் சட்டம் பல இன்னல்களையும், துன்பங்களையும் இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் அரசியல் வாதிகளுக்கும், தமிழ் மக்களுக்கும். தமிழ் இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் ஏற்படுத்துவதுடன், அவர்களை ஓர் துர்ப்பாக்கிய நிலைக்கு இட்டுச் சென்ற சட்டமாக காணப்படுகின்றது. தமிழ் மக்களை இலக்கு வைத்து கொண்டு வரப்பட்ட சட்டமானது இன்றைய கால கட்டத்தில் ஒரு ஆண்டு காலத்திற்கு முன்பு இடம் பெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு பின்பு எமது சகோதர சமூகமாக இருக்கக்கூடிய முஸ்லீம் சமூகத்தையும் நோக்கிப் பாய்ந்தது. 1979ஆம் ஆண்டு இச்சட்டமானது கொண்டு வரப்பட்ட போது பெரும்பான்மை இனமான சிங்கள சமூகத்தினரோ, தமிழ் பேசும் சமூகமான முஸ்லீம் சமூகத்தினரோ என யாரும் இதனை பற்றிப் பெரிதாகப் பேசவில்லை. தமிழருக்கு துர்ப்பாக்கிய நிலையே ஏற்பட்டிருந்தது. நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக ஜனநாயக ரீதியிலும், அஹிம்சை முறையிலும் மக்கள் நாட்டில் வீதிகளில் இறங்கிப் போராடுகின்ற ஓர் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு இருக்கின்ற இந்த வேளையில், பேரினமாக காணப்படுகின்ற சிங்கள மக்களையும் நோக்கி பாய்ந்துள்ளது. இதனை வேண்டாம் என கோசங்கள் பல சமூகங்களாலும் எழுப்பப்பட்டு வருகின்றது. எனவே இந்த சட்டம் முற்றாக இந்த நாட்டில் இருந்து அகற்றப்பட வேண்டும். தற்போது நாட்டில் அரசு தளம்பல் நிலை காணப்படுகின்ற தள்ளாடு நிலையில் இருக்கின்ற அரசாக காணப்படுகின்றது. இன்று ஜனாதிபதி ஒரு புறம், பிரதமர் ஒரு புறம், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு புறமாகவும் இருக்க பாராளுமன்றத்துக்குள்ளே பல

போட்டிகளும் சண்டைகளும் இடம் பெற்று கொண்டிருக்கின்ற வேளையில் ஏற்கனவே இருந்த இந்த சட்டத்தில் ஏற்கனவே இருந்து கொண்டிருக்கின்ற சில சீர்திருத்தங்களை மேற்கொண்டு நடைமுறைப்படுத்த நினைக்கின்றனர். சீர்திருத்தம் என்பது ஒருவரைக் கைது செய்தால் 18 மாதங்களில் விடுதலை செய்யப்பட வேண்டும். ஆனால் இன்று எமது தமிழ் இளைஞர்கள் 5 வருடம், 10 வருடம் என அரசியல் கைதிகளாக சிறை வாசம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். எனவே இச்சட்டத்தில் சீர் திருத்தங்கள் எதனையும் கொண்டு வராது சர்வதேசத்திற்கு முரணான வகையில் முன்பு இருந்த ஜனாதிபதி ஜெ.ஆர்.ஜெயவர்த்தன அவர்களால் முற்று முழுதாக இனவாதத்தோடு கொண்டு வரப்பட்ட இச்சட்டமானது முற்று முழுதாக இந்த இலங்கைத் திருநாட்டில் இருந்து அகற்றப்பட வேண்டும் எனவும், அனைத்து மக்களும் ஒன்றிணைந்து ஜனநாயக ரீதியில் இந்த நாட்டிலே எல்லோரும் ஒற்றுமையாக வாழ்வதற்கான ஒரு பிரேரணையினை இந்த மாநகர சபையின் உயரிய சபையில் நிறைவேற்ற வினையமான வேண்டுகோளாக முன் வைக்கின்றேன். இந்த பிரேரணைக்கு சபையில் சகல கௌரவ உறுப்பினாகளும் ஆதரவு அளித்து இப்பயங்கரவாத தடைச்சட்டத்தினை இந்நாட்டில் இல்லாது ஒழிக்க ஏதுவாக இதனை ஓர் தீர்மானமாக நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனக் கேட்டு கௌரவ முதல்வர் அவர்களிடமும் இதனை நிவேற்றித் தருமாறு அன்பாகக் கேட்டு உரையை நிறைவு செய்து அமர்ந்தார்.

கௌரவ உறுப்பினர் திரு. சூசைமுத்து கிளனி வசந்தகுமார் அவர்கள் குறித்த பிரேரணை தொடர்பாக பேச முற்படுகையில், கௌரவ முதல்வர் அவர்கள் குறுக்கிட்டு இந்த விடயமானது எமது ஆளுமைக்கு அப்பாற்பட்ட ஒன்றாக உள்ளதால் இதனையிட்டு எவரும் கருத்துத் தெரிவிக்க முடியாது. இதற்கு தாங்கள் ஆதரவா? ஆதரவில்லையா? என்பதை மட்டுமே தெரிவிக்க முடியும் எனத் தெரிவித்தார்.

கௌரவ பிரதி முதல்வர் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்தவர் கௌரவ பிரதி முதல்வர். இதற்கு ஆதரவு வழங்குபவர்கள் வழங்கலாம் இல்லாவிட்டால் பார்வையாளர்களாக இருக்கலாம் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் அவர்கள் குறுக்கிட்டு எங்கள் ஆளுமைக்கு அப்பாற்பட்ட விடயத்தை ஏன் சபைக்கு கொண்டு வந்தீர்கள்.? இது தொடர்பாக கூட்டக் குறிப்பில் பதிவிடப்படாது எனவும் குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால் உங்கள் செவிகளில் பதிவிடுவதற்காகவே சில கருத்துக்களை முன்வைக்கின்றேன். எமக்குரிய பேச்சுச் சுதந்திரத்தை தாருங்கள் என்றும், இத் தீர்மானத்தில் குறைபாடு இருக்கிறது என்றும் தெரிவிக்கையில்……

கௌரவ பிரதி முதல்வர் அவர்கள் குறுக்கிட்டு கௌரவ முதல்வர் அவர்களே, தாங்கள் தங்களது அறிவித்தல்களில் எமது ஆளுகைக்கு அப்பாற்பட்டு கொண்டு வரப்படுகின்ற பிரேரணைகள் தொடர்பில் எவரும் பேச முடியாது என்ற விடயத்தை தெளிவாக குறிப்பிட்டிருந்தீர்கள் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் அவர்கள் மீண்டும் குறுக்கிட்டு பேசுகையில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து பாராளு மன்றத்தில் நிறைவேற்றியதில் பல நெகிழ்வுத் தன்மைகள் இருக்கின்றன. ஏப்ரலுக்கு முற்பட்ட காலத்தில் இதனை கொண்டு வந்திருந்தால் இதற்கு நானும் ஆதரவளித்திருப்பேன். நீங்கள் இன்னுமொரு

சமூகத்தை ஆதரித்து அவர்களால் வழங்கப்படுகின்ற சில சுக போகங்களை அனுபவிப்பதற்காக என்பதனால் இதனை நான் எதிர்க்கின்றேன் எனத் தெரிவித்தார் .

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெட்ணராஜா திலீப்குமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது, கௌரவ முதல்வர் அவர்களே, அவர் ஒரு பிரேரணையினைக் கொண்டு வந்திருக்கின்றார். நீங்கள் வாக்கெடுப்புக்குச் செல்வோம் என்கின்றீர்கள். இது தொடர்பாக அவர்கள் கருத்துக்களை தெரிவிப்பதற்கு அனுமதி வழங்குங்கள். எங்களுக்கு சம்பந்தம் இல்லாத விடயம் என்றால் ஏன் அதனை கொண்டு வந்தீர்கள் எனக் கேட்டார்?.

கௌரவ முதல்வர் அவர்கள் குறுக்கிட்டு பேசுகையில், இது எங்களது விடயத்திற்கு அப்பாற்பட்ட விடயம் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெட்ணராஜா திலீப்குமார் அவர்கள் மீண்டும் பேசுகையில், நல்லாட்சி அரசாங்கத்துடன் சேர்ந்து வேலை செய்த தமிழ் தேசிய கூட்டமைப்பு அப்போது இதனைக் கொண்டு வந்திருந்திருந்தால் நாங்களும் அதற்கு ஆதரவளித்து வீதிகளில் இறங்கிப் போராடியிருப்போம். ஆனால் அதனை இப்போது அரசியல் இலாபத்திற்காக கொண்டு வந்திருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவித்தார்.

கௌரவ பிரதி முதல்வர் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்தவர் நான். எனவே இதனை விரும்பியவர்கள் ஆதரவு அளிக்கலாம். இல்லாவிட்டால் பயங்கரவாத தடைச் சட்டம் தேவை என்பவர்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கலாம் எனக் கூறினார்.

கௌரவ உறுப்பினர் திரு.சிவம் பாக்கியநாதன் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, பிரேரணையை கொண்டு வருவது ஒருவரது உரிமை. அதனை நாங்கள் விரும்பினால் ஆதரிக்கலாம் இல்லாவிட்டால் எதிர்க்கலாம் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.சிவராசா சிவராஜ் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, இங்கு பிரேரணையைக் கொண்டு வந்துள்ளனர். விரும்பியவர்கள் ஆதரவளிக்கலாம். அது அவர்களது விருப்பம். (பதிவு தெளிவின்மை)

கௌரவ உறுப்பினர் திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் அவர்கள் மீண்டும் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, நாங்கள் எதிரானவர்கள் அல்ல. பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் பல நெகிழ்வுத் தன்மைகள் இருக்கின்றன. எங்களுக்கும் பல நெகிழ்வுத் தன்மைகள் இருக்கின்றன. சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்ட அதிகாரம் நீதி மன்றத்திற்கு வழங்கப்பட்டடுள்ளது. அதற்கான சரியான விளக்கம் தரப்படவில்லை. ஏப்ரல் குண்டு வெடிப்புக்கு பின்பு தான் எமது சகோதர சமூகம் வெளியே வருகின்றது. அதற்கு முற்பட்ட காலத்தில் எங்கள் மக்கள் பட்ட துன்பங்களும் துயரங்களும் சொல்ல முடியாது. நான் அதனை அனுபவ ரீதியாக பட்டவன் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெட்ணராஜா திலீப்குமார் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, அப்படிக் அதனைக் கொண்டு வர முடியாது. ஏனென்றால் பாராளுமன்றத்தால் பெரும்பான்மை கொண்டு நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு விடயத்தை

உள்ளூராட்சி மன்றத்திற்கு கொண்டு வந்து விவாதிக்காது தீர்மானத்துக்கு கொண்டு செல்ல முடியாது எனத் தெரிவித்தார்.

(பதிவு தெளிவில்லை)

கௌரவ உறுப்பினர் திரு.சிவராசா சிவராஜ் அவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது, கௌரவ முதல்வர் அவர்களே இந்த பிரேரணையை சபைக்கு நிகழ்ச்சி நிரலில் ஊடாக கொண்டு வந்திருக்க கூடாது எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, பிரேரணை தொடர்பாக அவர்களது கருத்துக்களை தெரிவிப்பதற்கு அனுமதி வழங்குங்கள் எனக் கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெட்ணராஜா திலீப்குமார் அவர்கள் பேசும் போது, கௌரவ முதல்வர் அவர்களே, அது தொடர்பாக கதைக்க வில்லை. அவர் பிரேரணை கொண்டு வந்துள்ளார். நீங்கள் வாக்கெடுப்பிற்குச் செல்வோம் எனக் கூறுகின்றீர்கள் எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், ஆம். வாக்கெடுப்புக்குச் செல்வோம். விரும்பியர்கள் வாக்களிக்கட்டும். உடன்படாதவர்கள் வாக்களிக்காது விடட்டும் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெட்ணராஜா திலீப்குமார் அவர்கள் பேசுகையில், நீங்கள் சொல்வது சரி. அதற்கு முன் பிரேரணை தொடர்பாக சிலர் அவர்களது கருத்துக்களை தெரிவிப்பதற்கு அனுமதி வழங்குங்கள் எனக் கேட்டுக் கொண்டார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், அவ்வாறு விட முடியாது. ஏனென்றால் இது எங்களது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது. பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. உடபடா விட்டால் உடன்பட வில்லை என்ற தீர்மானத்தினை எடுப்போம் எனத் தெரிவிக்கையில்,

கௌரவ உறுப்பினர்களான திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை, திரு.சிவராசா சிவராஜ், திரு. செல்வராஜா குமார், திருமதி.மேரி கிறிஸ்டினா சசிதரன், திருமதி.சாரதாதேவி கங்கேஸ்வரன், திரு.பேரின்பசாமி சுரேஸ்குமார், திருமதி.சிவாகரன் சுலக்ஷனா, திரு.தம்பிப்பிள்ளை சிவானந்தராசா, திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் ஆகியோர் அவையிலிருந்து வெளியேறிய நிலையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

நாட்டில் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிக்கையிடுகின்ற நிலையிலும், பயங்கரவாத தடுப்புச் சட்டம் என்பது தொடர்ச்சியாக இருந்து வருகின்றமையானது சாதாரண நிலையிலுள்ள அன்றாடம் தமது ஜீவனோபாயத்திற்காக உழைக்கின்ற மக்களுக்கு பெரும் கஸ்டத்தை ஏற்படுத்தி வருகின்றது. எனவே பொது மக்கள் சார்ந்த பல்வேறு நல்ல விடயங்களுக்கு தடையாக இருக்கின்ற பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டும் என அரசினைக் கோரி கௌரவ பிரதி முதல்வர் திரு.கந்தசாமி சத்தியசீலன் அவர்களால் கொண்டு வரப்பட்ட பிரேரணை சபையில் முன்வைக்கப்பட்ட போது இவ்விடயத்தில் சில குறைபாடுகள் இருப்பதாகவும், தாம் இதற்கு உடன்பாடற்றவர்களாக தெரிவித்து கௌரவ உறுப்பினர்களான

திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை, திரு.சிவராசா சிவராஜ், திரு. செல்வராஜா குமார், திருமதி.மேரி கிறிஸ்டினா சசிதரன், திருமதி.சாரததேவி கங்கேஸ்வரன், திரு.பேரின்பசாமி சுரேஸ்குமார், திருமதி.சிவாகரன் சுலக்ஷனா, திரு.தம்பிப்பிள்ளை சிவானந்தராசா, திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் ஆகியோர் அவையிலிருந்து வெளியேறிய நிலையில் மற்றும் கௌரவ உறுப்பினர்களான திருமதி.சசிகலா விஜயதேவா, திருமதி.பற்றிமா பல்தசார், திரு.தெய்வநாயகம் சிவலிங்கம், திரு.ஸ்ரீபன் ராஜன் ஆகியோர் ஏலவே அனுமதியுடன் அவையிலிருந்து வெளிச் சென்றிருந்த நிலையிலும், அவையிலிருந்தோரில் பின்வருவோர் முன்மொழிந்து வழி மொழிய குறித்த பிரேரணை சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன் மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.சீனித்தம்பி ஜெயந்திரகுமார்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.மயில்வாகனம் நிஸ்கானந்தராஜா.**

2. கௌரவ உறுப்பினர் திரு.கந்தசாமி ரகுநாதன் அவர்களால்,
   1) மாநகர எல்லைக்குள் செயற்படுகின்ற சிகையலங்கார நிலையங்களில் மாணவர்களுக்கான சிகை அலங்காரத்தின் போது பாடசாலை நடைமுறைக்கு ஒப்பான ஓர் நடைமுறையை கைக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தியும்,

   2) மாநகர எல்லைக்குள் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளிலும் அறநெறிப் பாடசாலைகள் நடைபெறுகின்ற பகல் வேளையில் ஏனைய பிரத்தியேக டியூசன் வகுப்புகள் நடாத்தப்படுவதை தடை செய்வதற்கும்,
   என மேற்படி இவ்விரு விடயங்களுக்குமான சபை அனுமதியைக் கோரி கொண்டு வரப்படும் பிரேரணை.

கௌரவ உறுப்பினர் திரு.கந்தசாமி ரகுநாதன் அவர்கள் பிரேரணையை முன்வைத்து உரையாற்றுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, மாநகர ஆணையாளர் உட்பட அனைவருக்கும் இன்நேர வணக்கம். சிகையலங்கார நிலையங்களில் பாடசாலை மாணவர்களுக்கு பல விதமான அலங்காரங்களில் முடி வெட்டப்படுகின்றது இது மாணவர்களின் செயற்பாட்டிற்கு ஒழுக்கமானதாக இல்லை. எனவே பாடசாலை மாணவர்களுக்கு சீரான வகையில் முடி வெட்டப்பட வேண்டும் என ஒரு தீர்மானத்தினை எடுத்து வழங்க வேண்டும் எனக் கூறினார்.

மேலும் அவர் தொடர்கையில், ஞாயிற்றுக்கிழமைகளில் அறநெறிப் பாடசாலைகள் நடைபெறுகின்ற பகல் வேளையில் பிரத்தியேக வகுப்புக்களும் நடை பெறுவதனால் அதற்குச் செல்லும் மாணவர்கள் அறநெறி வகுப்பகளில் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே ஞாயிற்றுக் கிழமைகளில் பிரத்தியேக வகுப்புக்களை தடை செய்வதன் மூலம் பிள்ளைகள் அறநெறிப் பாடசாலைக்குச் தடையின்றி சென்று கற்பதன் ஊடாக அவர்கள் நற்பிரஜைகளாகவும், ஒழுங்க சீலர்களாகவும் இருப்பர் என்பதனையும் தெரிவித்து இந்தப் பிரேரணையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு. ஜேம்ஸ் நவரெத்தினராஜா திலீப்குமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, நான் கூறுவது இந்த விடயம் அல்ல. எமது மாநகர சபையினால் உயரிய சபையில் முன்வைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றபட்ட விடயங்கள் பல இது வரையில் செயற்படுத்தப்படாதுள்ளன. எனவே அவ்வாறான தீர்மானங்களை எமது சபை நிறைவடைவதற்குள் அவை முழுவதுமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இது தொடர்பான குழு ஒன்றினை அமைத்து

அதற்கான அறிக்கையினைப் பெற்று ஆணையாளரின் அனுமதியுடன் அவற்றினை செயற்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கௌரவ உறுப்பினர் திரு. புஸ்பராஜ் ரூபராஜ் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, என்னால் கடந்த இரு வருடங்களுக்கு முன்பு மைதானம் தொடர்பான பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டு அது நிறைவேற்றப்பட்டு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்காக குழு ஒன்றும் நியமிக்கபப்பட்டிருந்தது. அக்குழு இது தொடர்பாக பேசவுமில்லை, அதற்கான தீர்வினைப் பெற்றுத் தரவுமில்லை. எனவே அக்குழுவின் அறிக்கையினை விரைவில் பெற்று அதனை நிறைவேற்றித் தருமாறு அல்லது அத்தீர்மானத்தினை சபை மூலமாக நடைமுறைப்படுத்தி தருமாறு கேட்டுக் கொள்கின்றேன். அத்துடன் இந்த விடயத்தை கூட்டக் குறிப்பில் பதிவிடுமாறும் கேட்டுக் கொள்வதாகக் கூறினார்.

கௌரவ உறுப்பினர் திரு.சீனித்தம்பி ஜெயந்திரகுமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, இந்த சிகை அலங்கார நிலையம் தொடர்பாக தீர்மானம் ஒன்று ஏற்கனவே 2018.06.09ஆந் திகதி நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாது கௌரவ உறுப்பினர் திரு.துரைசிங்கம் மதன் அவர்கள் கூட மஞ்சந்தொடுவாய் பொலிஸில் இது தொடர்பாக முறைப்பாடு ஒன்றினைச் செய்துள்ளார். இங்கு பிரேரணைகள் நிறைவேற்றப்படாத காரணத்தில் தான் இப்பிரச்சனை ஏற்படுகின்றது. எனவே தீர்மானங்களை சரியாக நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெத்தினராஜா திலீப்குமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, கடந்த காலங்களில் சபை அமர்வுகளின் போது கௌரவ ஊறுப்பினர்களுக்கு அவர்களது கட்சி சார்பாக உரையாற்றுவதற்கு சந்தர்பம் வழங்கப்பட்டிருந்தது. தற்போதும் அந்த சந்தர்ப்பத்தினை மீண்டும் வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், குறித்த இரு விடயங்களை உள்ளடக்கிய பிரேரணை தொடர்பில் வேறு கருத்துக்கள் இல்லாதவிடத்து இதனை ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

மேற்படி இரு விடயங்களை உள்ளடக்கியதாக கௌரவ உறுப்பினர் திரு.கந்தசாமி ரகுநாதன் அவர்களால் கொண்டு வரப்பட்ட பிரேரணை சபையில் முன்வைக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்ட நிலையில் இது தொடர்பில் உரிய துறைசார்ந்த அமைப்பினர்க்கு அறிவித்து நடவடிக்கை எடுப்பதற்காக பின்வருவோர் முன்மொழிந்து வழி மொழிய குறித்த பிரேரணை சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன்மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.மாசிலாமணி தியாகராஜா ஸ்ரீஸ்கந்தராஜா.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.சிவராசா சிவராஜ் .**

- **பௌர்ணமி கலைவிழா நிகழ்வினை மீண்டும் ஆரம்பித்தல்.**

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், கலைக் குழுவின் பௌர்ணமி தின நிகழ்வு மீளவும் எதிர்வரும் 04.04.2022ந் திகதி காந்திப் பூங்காவில் இடம் பெறும் என அறியத் தந்துள்ளனர் என சபையினர்க்குத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.துரைசிங்கம் மதன் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, தற்போது நாட்டில் இடம் பெறுகின்ற ஆர்பாட்டங்கள், போராட்டங்களின் மத்தியில் இவ்வாறான கலை நிகழ்வுகளை நடாத்துவது முறையற்றதாக தெரிகின்றது. நான் இதற்கு எதிரானவன் அல்ல. நாட்டின் சூழ்நிலையினை யோசித்துச் செய்யுங்கள் எனவும் தெரிவித்தார். மேலும் அவர் தொடர்கையில் எமது மாநகர சபையின் வரிறுப்பாளர்கள் தொடர்பாக ஒரு விடயத்தை முன்வைக்க விரும்புகின்றேன். எமது வரியிறுப்பாளர்கள் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக மிகவும் கஸ்டப்படுகின்றார்கள். எனவே எமது மக்கள் மாநகர சபைக்கு வரி செலுத்துவதில் ஒரு சலுகையினை வழங்கி அதனை இரண்டு மூன்று தடவைகளில் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். ஏனெனில் மக்கள் மிகவும் கஷ்டமான நிலையில் உள்ளனர் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.மாசிலாமணி சண்முகலிங்கம் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, நாங்கள் இக் கலை நிகழ்வினை நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்பவும், அவசர காலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதனால் அதற்கேற்ப பொலிஸாரின் அனுமதியினைப் பெற்றும் எதிர்வரும் 16.04.2022ந் திகதி நடாத்துவதென்றே கூட்டத் தீர்மானத்தினை எடுத்து இருப்பதாகவும், எனவே அப்போதைய நிலமைக்கேற்பவே செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

- **நிலையியற் மற்றும் விசேட குழுவில் ஏற்பட்டுள்ள உறுப்பினர் வெற்றிடத்தை நிரப்புதல்.**

கௌரவ உறுப்பினர்களான திரு.ஜயாத்துரை சிறிதரன் மற்றும் திருமதி.குஜாஜினி பாலகிருஸ்ணன் ஆகியோரது உறுப்பினர் பதவியானது கடந்த 04.03.2022ந் திகதியன்று வெளியிடப்பட்ட 2269/80ம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளதன் காரணமாக அவர்கள் உறுப்பினராக செயற்பட்ட முறையே சுகாதாரக் குழு, கலாசாரக் குழு என்பவற்றில் உறுப்பினர் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. புதிய உறுப்பினர்களை தெரிவு செய்து அவ்விடங்களை நிரப்பிக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

கௌரவ முதல்வர் அவர்கள் உறுப்பினர் பதவி முடிவுறுத்தப்பட்ட மேற்படி பெயருடைய இரு உறுப்பினர்களிற்கு பதிலான புதிதாக இருவரை தெரிவு செய்யுமாறு சபையினரைக் கேட்டுக் கொண்டார்.

இதற்கமைவாக சுகாதாரக் குழுவின் உறுப்பினர் வெற்றிடத்திற்கு புதிய உறுப்பினராக கௌரவ உறுப்பினர் திரு.சிவானந்தன் மேகராஜ் அவர்களும், கலாசாரக் குழுவின் உறுப்பினர் வெற்றிடத்திற்கு புதிய உறுப்பினராக கௌரவ உறுப்பினர் திரு.சிவம் பாக்கியநாதன் அவர்களும் பின்வருவோர் முன்மொழிந்து வழி மொழிய சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன்மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.தம்பிராஜா இராஜேந்திரன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. சச்சிதானந்தம் கமலரூபன்.**

## ➢ கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை அவர்களின் சமூக சேவையில் 50 வருட நிறைவு.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், தேனீர் இடைவேளைக்கு முன்னர் எம்முடன் தற்போது கடமையாற்றிக் கொண்டிருக்கும் கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை அவர்கள் தனது சமூக சேவையில் 50 வருட பூர்த்தியினை முன்னிட்டு அது பற்றி சிறிய உரையாற்ற கோரியுள்ளார். எனவே அதற்கான சந்தர்ப்பம் அவருக்கு வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை அவர்கள் உரையாற்றுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, கௌரவ பிரதி முதல்வர் அவர்களே, கௌரவ உறுப்பினர்களே, ஆணையாளர் அவர்களே, பொறியியலாளர் அவர்களே மற்றும் ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தனை தெரிவித்துக் கொள்கின்றேன். எனது பூர்வீகம் மட்டக்களப்பு. நான் எனது சமூக சேவையில் 50 ஆண்டுகள் கடந்து வர நான் வணங்கும் எல்லாம் வல்ல இறைவன் ஜேசு கிறிஸ்துவுக்கு எல்லா துதியும் மகிமையும் உண்டாகும் எனக் கூறிக் கொண்டு, நான் 1972 ஆம் ஆண்டு கோட்டமுனை மெதடிஸ்த திருச்சபையிலே ..... இருந்த பொழுதே எனது சமூக சேவையிலே காலடி எடுத்து வைத்தேன். அதன் பின்பு 1973ஆம் ஆண்டு நான் புதூர் தபால் நிலையத்தின் தபால் அதிபராக நியமனம் பெற்றேன். எனக்கு இந்த சமூக சேவையில் நாட்டத்தினையும் என்னை அன்பின் பாதையிலும் நேர் வழிகாட்டி கருணையுடனும், மனித நேயத்துடனும் என்னை வளர்த்த எனது தாய், தந்தையருக்கு எனது சமூக பணியை அர்ப்பணிக்கின்றேன். என்னை அவர்கள் இப்படி வளர்க்கா விட்டால் நான் இந்த இடத்துக்கு வந்திருக்க முடியாது. எனவே அவர்களை இந்த சந்தர்ப்பத்திலே, அதாவது நான் மண்ணுக்குள் மறையும் வரைக்கும் இந்த சந்தர்ப்பத்திலே நினைவு கூறக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

நான் புதூர் தபால் அதிபராக சேர்ந்த போது உங்களுக்குத் தெரியும் அது மிகவும் பின் தங்கிய கிராமமாகவே காணப்பட்டது. 1973ஆம் ஆண்டு அங்கு மக்கள் தண்ணீருக்கு மிகவும் சிரமப் பட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் தண்ணீருக்காக நீண்ட நேரம் வரிசையில் காத்துக் கிடந்தனர். அப்போதும் அங்கு சிலர் வந்து என்னை சங்கங்களில் இணையுமாறு கோரினர். அப்போது கிராமோதய சங்கம் உருவாக்கப்பட்டது. 1982ல் அந்த நேரத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களது காலத்தில் கிராமோதய சபைகள் உருவாக்கப்பட்டன. அந்த நேரத்தில் 6 கிராமங்களை உள்ளடக்கியதாக இச்சபை உருவாக்கப்பட்டது. அதில் 6 கிராமத்தையும் ஒன்றிணைத்து ஒரு தலைவர் நியமிக்கப்பட்டார். அதில் திருப்பெருந்துறை கிராமமும் உள்ளடக்கப்பட்டிருந்தது. சொல்லின் செல்வன் மண்ணின் மைந்தன் கௌரவ செல்லையா இராஜதுரை அவர்களும் எனது தந்தையாரும் நெருங்கிய நண்பர்கள். இம் மாநகர சபை 1967ஆம் ஆண்டு மாநகரசபையாக்கப்பட்ட போது கௌரவ செல்லையா இராஜதுரை அவர்கள் தேர்தலில் போட்டியிட்டு முதன்முதலாக சபை முதல்வராக வந்தார். அப்போது எனது தந்தையார் இம் மாநகர சபையின் பதில் பொறியியலாளராக இருந்தார். எனவே எனது தந்தையாருக்கும் அவருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அவர் எனக்கு நன்கு நெருக்கமானவர். அவர் எனக்கு ஊக்கமளித்தார். உங்களது நூலகத்தை அமைத்துக் கொடுத்தார், புதூர் சித்தி விநாயகர் கோயிலுக்கு கிணறு அமைத்துக் கொடுத்தார், மின்சாரத்தினைப் பெற்றுக் கொடுத்தார், பாலர் பாடசாலையினையும் அமைத்துக் கொடுத்து எனது கிராமோதய அபிவிருத்திச் சங்கத்தின் தலைவரையும் ஊக்கப்படுத்தினார். அவரையும் இந்த சந்தர்ப்பத்தில் நினைவு கூறுகின்றேன். அவசர காலச் சட்டத்தின் மூலம் விமான நிலையம் அமைப்பது என்பதன் பேரில் அப்பாவி மக்களின் காணிகள் எல்லாம் அவசர

அவசரமாக சூறையாடப்பட்டன. அப்போது அதனை எல்லோரும் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர். மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த மாதிரி வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறினர். அவர்களது வீடுகள் உடைக்கப்பட்டன. 300 மீற்றர் காணி போதுமென்று நாங்கள் கூறினோம். ஆனால் 500 மீற்றர் காணி எடுக்கப்பட்டது. காணிகளை இழந்தவர்களுக்கு இதுவரை எந்தவித நஸ்ட ஈடுகளும் வழங்கப்பட வில்லை. நான் முடிந்தவரை மக்களுக்கு சேவையாற்றினேன். அப்போது இருந்த ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களை நான் போய் சந்தித்து கதைத்து அவர் 25 வீடுகளைக் கட்டிக் கொடுத்தார். அதன் பின்பு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்கள் பிரதி முதல்வர் பதவியினை எனக்குத் தந்து 5 வருடங்கள் சேவையாற்றவதற்கு என்னை உற்சாகப்படுத்தினார். அவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வாழ்க்கையில் இந்த மண்ணிலே வந்த நாங்கள் மண்ணிற்கே திரும்பிப் போகின்றோம். எனவே எங்களுக்கு கிடைத்த இந்த காலப் பகுதியில் மக்களுக்கு சேவை செய்வோம். எனவே நான் வை.எம்.சி.ஏயில் 30 ஆண்டு காலம் இருந்தேன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் 15 வருட காலம் உப தலைவராக இருந்தேன், மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராக இருந்தேன், திடீர் மரண விசாரணை அதிகாரியாகவும் இருந்தேன், 1995ஆம் ஆண்டு மிகவும் பிரச்சனையான காலப் பகுதியில் பிரேதங்கள் குவிந்து கிடந்தன. நான் தபால் அதிபராக இருந்து கொண்டு அதனைச் செய்ய முடியாது. அந்த நேரம் எனக்கு ஒரு விஷேட அழைப்புக் கிடைத்தது. அதைத் தொடர்ந்து 1993ஆம் ஆண்டு தொடக்கம் 1996ஆம் ஆண்டு வரை 3 ஆண்டுகள் திடீர் மரண விசாரணை அதிகாரியாகக் கடமையாற்றினேன். இதனால் பெரிய வருமானம் கிடைக்குமென்று என்று நினைப்பார்கள். ஒரு பிரேத பரிசோதனையைச் செய்து அறிக்கை கொடுத்தால் 300 ரூபாய் காசு கிடைக்கும். நான் அதற்காக செல்லவில்லை. ஒரு சம்பவத்தை சொல்ல வேண்டும். எனது தந்தை குருநாகலில் பொறியியலாளராக கடமையாற்றிய போது மாரடைப்பினால் மரணமடைந்தார். நாங்கள் தந்தையின் பிரேதத்தை பெற திடீர் மரண விசாரணை அதிகாரி வரும் வரை நீண்ட நேரம் காத்திருந்தோம். அந்த நாள் முழுதும் பிரேதம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டு அடுத்த நாள் தான் வழங்கப்பட்டது. இதனால் எனது தாயார் மிகவும் கலங்கிப் போனார். அதனை உணர்ந்த நான் ஒரு மனிதன் உயிரிழந்தால் வைத்தியசாலையில் குடியிருக்கத் தேவையில்லை. உடனே வீட்டிற்கு கொண்டு செல்ல வேண்டும் என நினைத்தேன். எனவே அந்தப் பணியையும் நான் செய்தேன். எனவே கடந்து வந்த பாதையில் இந்த ஐம்பதாவது வருடத்தை அன்பான உங்களுடன் கௌரவ முதல்வர், கௌரவ பிரதி முதல்வர், கௌரவ உறுப்பினர்கள் ஆகிய உங்களுடன் பகிர்வதற்கு உங்களது அன்பை நான் பெற்றிருக்கின்றேன். நீங்கள் என் உடன் பிறப்புக்கள் என்று நினைத்துத் தான் நான் உங்களுடன் பகிர்கின்றேன். நான் உங்களிடம் கூறுவது ஒற்றுமையாக இருங்கள், இது புண்ணிய பூமி, மட்டக்களப்பு மண்ணைப் போல் இலங்கையில் எங்கும் காண முடியாது. உங்கள் சேவையை வழங்குங்கள். இறைவன் உங்களை ஆசீர்வதிப்பார். ஆந்த வகையில் இந்தச் சந்தர்ப்பத்திற்கு வாய்ப்பு கொடுத்த கௌரவ முதல்வர் அவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். புதிய ஆணையாளருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் எனக் கூறி விடை பெற்று அமர்ந்தார்.

**இதனை அடுத்து கௌரவ முதல்வர் அவர்கள், சபை நடவடிக்கைகள் தேனீர் இடை வேளைக்காக ஒத்தி வைக்கப்படுகின்றது எனவும், மீண்டும் 15 நிமிடங்களில் சபை நடவடிக்கைகள் ஆரம்பமாகும் எனவும் அறிவித்தார்.**

**தேனீர் இடைவேளையின் பின் கௌரவ முதல்வரின் தலைமையில் மு.ப.11:45க்கு சபை மீண்டும் கூடியது.**

## ➢ பாதீட்டு வேலை மாற்றம்.

1. கௌரவ உறுப்பினர் திருமதி.சசிகலா விஜயதேவா அவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக, 2019 பாதீட்டில் முன்மொழியப்பட்டிருந்த சுக்குறு லேன் புனரமைப்பு வேலைக்கு பதிலாக மாரியம்மன் கோயில் வீதியையும் மேல்மாடி வீதியையும் இணைக்கும் குறுக்கு வீதி புனரமைப்பு வேலை என்ற வேலையை மாற்றம் செய்து கொள்வதானது பரிசீலிக்கப்பட்டு பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையினரால் அனுமதி வழங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன்மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.அந்தோனி கிருரஜன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. சீனித்தம்பி ஜெயந்திரகுமார்.**

2. கௌரவ உறுப்பினர் திரு.அந்தோனி கிருரஜன் அவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக, 2021 பாதீட்டில் வட்டாரம் 18ல் புளியந்தீவு தெற்கு சனசமூக நிலைய பொதுக் கட்டடம் அமைப்பு வேலை முன்மொழியப்பட்டுள்ள போதிலும் அந்த வேலையானது பல படிமுறைகளின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டிய நிலை இருப்பதால் அதன் செயற்பாடுகள் அப்படியே இருக்கத்தக்கதாக அதனுடன் பின்வரும் இரு வேலைத் திட்டங்களையும் உட்சேர்த்துக் கொள்வதானது பரிசீலிக்கப்பட்டு பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையினரால் அனுமதி வழங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

   i. வாவிக்கரை வீதி – 02 வடிகான் அமைப்பு வேலை (வைத்தியசாலையின் பின்புறமாக நீர் வடிந்தோடி அதனை வாவியினுள் கொண்டு சேர்க்கும் வடிகான்)
   ii. நல்லையா வீதி கடைசிக் குறுக்கு வீதி – ( வாவிக்கரை வீதி – 01ல் இருந்து வரும் போது வலது புறமாக 1வது குறுக்கு)

**முன்மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.துரைசிங்கம் மதன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. தம்பிராஜா இராஜேந்திரன்.**

3. கௌரவ உறுப்பினர் திரு.தம்பிராஜா இராஜேந்திரன் அவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக, 2021ம் ஆண்டு பாதீட்டில் வட்டாரம் 01இல் முன்மொழியப்பட்டிருந்த வெளிச்ச வீடு புனரமைப்பு வேலைக்கு பதிலாக அவசர அவசிய தேவை கருதி பின்வரும் இரு வேலைத் திட்டங்களை செய்து கொள்வதானது பரிசீலிக்கப்பட்டு பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையினரால் அனுமதி வழங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

   i. பாலமீன்மடு -கிராமோதய வீதி, 1ஆம் குறுக்கு கொங்கிறீட்டிடல் -100 மீற்றர்
   ii. புதிய எல்லை வீதி குறுக்கு ஒழுங்கை தாரிடல். - 45 மீற்றர்.
   iii.திராய்மடு 6ம் குறுக்கு வீதி தாரிடல் - 100 மீற்றர்.

**முன்மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.அந்தோனி கிருரஜன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. சீனித்தம்பி ஜெயந்திரகுமார்.**

கௌரவ உறுப்பினர் திரு.துரைசிங்கம் மதன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கும், கௌரவ முதல்வர் அவர்களே, வட்டாரம் 3ல் வருகின்ற வெளிச்ச வீடு திருத்தும் வேலையானது அந்த வட்டார உறுப்பினரால் செய்யப்படா விட்டால் அதனை நாங்கள் மாநகர சபையினால் திருத்தம் செய்வோம். ஏனெனில் அது மட்டக்களப்பில் உள்ள மிகப் பிரபல்யமான முக்கிய இடம். அத்துடன் மட்டக்களப்பில் நிறையப் புராதன இடங்கள் காணப்படுகின்றன "மொட்டைக் கோரி" என்ற இடம் அடுத்து "காக்கைத்தீவு" என சில இடங்கள் இருந்தன. இவை தற்போது மருகிச் செல்கின்றன. எனவே அவற்றை நாங்கள் அழிந்து விடாது பாதுகாக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் இது விடயமாக பதிலளிக்கையில், வெளிச்ச வீடு பெயின்டிங் செய்வதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இருந்த போதிலும், அது ஆணையாளரின் தலையீடு காரணமாக செய்ய முடியாது போய் விட்டது. எனினும் ஆளுநரிடம் இது தொடர்பாக கதைத்த போது அவரும் இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம் எனவும் தெரிவித்து, இதனை துறைசார்ந்த நிபுணர்களைக் கொண்டு ஓர் சுற்றுலா மையமாக மாற்றுவதற்கான திட்ட முன்மொழிவினை வழங்கி அதற்காக ரூபா.103 மில்லியன்களுக்கான ஒதுக்கீட்டினை வழங்கியிருக்கின்றார். அதனை நாங்கள் 3 கட்டமாக நிறைவேற்றிக் கொள்ளலாம். 1வது கட்டமாக ரூபா.14 மில்லியன்களும், 2வது கட்டமாக ரூபா.40 மில்லியன்களும், மிகுதி 3வது கட்டமாக நிறைவேற்ற முடியும். இதனை உலக வங்கி மூலமாக நாங்கள் பெற்றுக் கொள்ளவும், அதேபோன்று Performance Grandஇன் மூலமாக கிடைக்கப் பெற்ற நிதியையும் பாலமீன்மடு Light house வேலைக்குப் பயன்படுத்தப் போகின்றோம். அதில் எங்களது LEDP கிராமிய எழுச்சித் திட்டம் பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு எங்களது கிராமி எழுச்சித் திட்டம் திருத்தப்பட வேண்டும். அதற்கு நாங்கள் ஒரு கூட்டத்தினை கூட்டி இவ்விடயத்தினை உள்வாங்கி அதன் மூலம் ஒரு பகுதி நிதியினை நாங்கள் பெற்றுக் கொள்ளலாம் என நினைக்கின்றேன்.

அவர் மேலும் தொடர்கையில், அடுத்து எமக்கு வேலைக் குழுவின் 01.04.2022ந் திகத நடைபெற்ற கூட்டறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளது. இதில் 5 உறுப்பினர்கள் பங்கு பற்றுதலுடன் இவர்கள் சில சிபார்சுகளையும் வழங்கி இருக்கின்றனர். நாங்கள் எமது நிதி நிலைமைக்கு ஏற்ப அவற்றினை அணையாளரின் சிபார்சுடனும் செய்யலாம். அத்துடன் வட்டாரங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி எல்லைக்குள் அவர்கள் தங்களது வேலைகளை செய்யலாம் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.இராசலிங்கம் அசோக் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, நினைவுத் தூபி தொடர்பாக ஒரு விடயத்தினை குறிப்பிட வேண்டும். ஈஸ்டர் குண்டு வெடிப்பு நினைவு தினம் எதிர்வரும் 21ந் திகதி அனுஸ்டிக்கப்படவுள்ளதனால் அதனை பெயிண்ட் பண்ணி சுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.பேரின்பசாமி சுரேஸ்குமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, 2021ம் ஆண்டு பாதீட்டில் குறிப்பிடப்பட்ட வேலைகள் 80% முடிவடைந்து இருக்கின்றது. ஆனால் 13ஆம் வட்டார கௌரவ உறுப்பினர் திரு.தெய்வநாயகம் சிவலிங்கம் அவர்களால் தெரிவு செய்யப்பட்டு பாதீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 3 வீதி வேலைகள்

இன்னும் நிறைவடையாத நிலையில் காணப்படுகின்றது. எனவே அதனையும் உள்வாங்குமாறு கேட்டுக் கொள்வதாகத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், பாதீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வேலைகளையும் செய்து முடிக்க இயலாது. காரணம் போதியவு நிதி இல்லை. அந்தந்த வட்டாரத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி எல்லைக்குள் 2021ஆம் ஆண்டுக்கான வேலைகள் வேலைக் குழுவின் சிபாரிசுடன் நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு. ஜேம்ஸ் நவரெத்தினராஜா திலீப்குமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, 2022ஆம் ஆண்டுக்கான பாதீட்டு வேலைகள் தங்களால் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுகின்றன. அந்த வகையில் தங்களது 2022 ஆம் ஆண்டு பாதீட்டுக்கு ஆதரவு வழங்காத சில கௌரவ உறுப்பினர்களும் வீதிகளைச் செய்ய விரும்புகின்றனர். எனக்குத் தேவையில்லை. நீங்கள் செய்தால் நான் செய்த மாதிரித் தான். எனவே அப்படி செய்ய விரும்புபவர்களையும் உள்வாங்கி செயற்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

## ➢ மாதாந்த சபை அமர்வுகளுக்கான திகதி மாற்றம்.

கௌரவ பிரதி முதல்வர் அவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய, 2022ம் ஆண்டின் மீதமுள்ள மாதங்களுக்கான பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கான திகதிகள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 17வது பிரிவிற்கு அமைவாக, மாதத்தின் முதலாவது வாரத்தில் வரும் வியாழக்கிழமைகளில் நடத்துவதற்கு ஏதுவாக கூட்டத் திகதிகள் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டு பின்வருவோர் முன்மொழிந்து வழிமொழிய சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

| மாதம் | திகதி | கிழமை |
|---|---|---|
| வைகாசி | 05.05.2022 | வியாழன் |
| ஆனி | 02.06.2022 | வியாழன் |
| ஆடி | 07.07.2022 | வெள்ளி |
| ஆவணி | 04.08.2022 | வியாழன் |
| புரட்டாதி | 08.09.2022 | வியாழன் |
| ஐப்பசி | 06.10.2022 | வியாழன் |
| கார்த்திகை | 03.11.2022 | வியாழன் |
| மார்கழி | 08.12.2022 | வியாழன் |

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு.துரைசிங்கம் மதன்.**
**வழி மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு. மயில்வாகனம் ரூபாகரன்.**

## ➢ புதிய மாநகர ஆணையாளருக்கான அதிகார கையளிப்பு.

**மாநகர சபையின் புதிய ஆணையாளராக கடமையேற்றிருக்கும் திரு.நா.மதிவண்ணன் அவர்களுக்கும் ஏனைய பதவிநிலை அலுவலகர்க்குமான அதிகாரக் கையளிப்பு.**

மாநகர சபையின் புதிய மாநகர ஆணையாளராக கடந்த 31.03.2022ந் திகதி முதல் கடமையைப் பொறுப்பேற்றிருக்கும் திரு.நா.மதிவண்ணன் அவர்களுக்கும், ஏனைய பதவிநிலை அலுவலகர்களுக்கும் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக பின்வரும் 01–10 வரையான அதிகாரங்களை புதிய மாநகர ஆணையாளர் கடமையைப் பொறுப்பேற்ற திகதியாகிய 31.03.2022ந் திகதி முதல் செயல்வலுப் பெறும் வகையில் கையளிப்பதற்கான சபை அனுமதியினைக் கோரும் முன்மொழிவானது சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

## அதிகாரக் கையளிப்பு

1947ம் ஆண்டு மாநகர சபை கட்டளைச் சட்டத்தில் செய்யப்பட்ட அனைத்து திருத்தங்களையும் உள்ளடக்கிய 1987ம் ஆண்டின் 252ம் இலக்க மாநகர சபை கட்டளைச் சட்டதின் 32ம் பந்திக்கு ஏற்ப இவ்வுயரிய சபை கொண்டுள்ள அதிகாரங்களையும் தத்துவங்களையும் நடைமுறைப்படுத்தும் வகையில்,

மட்டக்களப்பு மாநகர சபையின் புதிய மாநகர ஆணையாளராக கடந்த 31.03.2022ந் திகதி முதல் கடமையைப் பொறுப்பேற்றிருக்கும் திரு.நா.மதிவண்ணன் அவர்களுக்கு மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக பின்வரும் அதிகாரங்கள் அத்திகதி முதல் செயல்வலுப் பெறும் வகையில் கையளிக்கப்படுகின்றன.

### 01. அதிகாரக் கையளிப்பு (01)

**மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 14ம் பந்தியின் 4,5,6 ஆம் பிரிவுகளிற்கு அமைவாக தியாகராஜா சரவணபவன்** ஆகிய சபையின் **கௌரவ முதல்வர்** அவர்கள் மாநகர சபையின் **பிரதி முதல்வர் கந்தசாமி சத்தியசீலன்** அவர்களுக்கும், மாநகர சபையின் **ஆணையாளர் நா.மதிவண்ணன்** அவர்களுக்கும் மற்றும் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் சபையின் எந்தவொரு உத்தியோகத்தருக்கும், மாநகர சபையின் விடயங்களை நிருவகிக்கும் வகையில் எந்தவொரு அதிகாரத்தையும், கடமைகளையும் வழங்குவதற்கும், அவற்றை நிறைவேற்றுமாறு பணிப்பதற்கும் உரிய அதிகாரம் வழங்கப்படுகின்றது.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு.சீனித்தம்பி ஜெயந்திரகுமார்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திருமதி.மா.தியாகராஜா ஸ்ரீஸ்கந்தராஜா.**

### 02. அதிகாரக் கையளிப்பு (02)

**மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 170 ஆம் பந்தியின் 1,2,3 ஆம் பிரிவுகளிற்கு** அமைவாக **கௌரவ முதல்வர் அவர்களுக்கு அடுத்து சபையினதும் அனைத்து**

**உத்தியோகத்தர்களினதும் ஊழியர்களினதும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக மாநகர ஆணையாளர் இருக்க வேண்டும்.** மேலும் அனைத்து உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் மாநகர சபையின் ஆணையாளருக்கு கீழாக இருந்து செயற்பட வேண்டும்.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு.அந்தோனி கிருரஜன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திருமதி.சசிகலா விஜயதேவா.**

## 03. அதிகாரக் கையளிப்பு (03)

**மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 171 ஆம் பந்தியின் 1ம், 2ம் பிரிவுகளிற்கு ஏற்ப,** மாநகர சபை கட்டளைச் சட்டம் மற்றும் பாராளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள எழுத்திலான ஒரு சட்டம் ஆகியவற்றிற்கு அமைவாக மாநகர ஆணையாளர் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரக எல்லைக்குள் கடமைகளை நிறைவேற்றுவதற்காக சபையின் ஒரு உத்தியோகத்தருக்கு முதல்வரின் ஒப்புதலுடன் அதிகாரம் அளிக்க முடியும்.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு.தம்பிராஜா ராஜேந்திரன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.கந்தசாமி ரகுநாதன்.**

## 04. அதிகாரக் கையளிப்பு (04)

ஆணையாளரும் மற்றும் எந்தவொரு உத்தியோகத்தரும் தமது கடமைகளை நிறைவேற்றும் போது **மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 172, 173ம் பந்திகளில்** குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை கருத்திற் கொள்ள வேண்டும்.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு.துரைசிங்கம் மதன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.மாசிலாமணி சண்முகலிங்கம்.**

## 05. அதிகாரக் கையளிப்பு (05)

மாநகர சபையினால் வழங்கப்படும் மற்றும் பெறப்படும் சேவைகள் வேலைகள் பொருட்கள் தொடர்பாக **மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 227, 228ம் பந்திகளில்** குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைவாக, மாநகர சபை சார்பாக **மாநகர ஆணையாளர் அனுமதி வழங்கலாம். மற்றும் சபை அனுமதியோடு மேற்கொள்ளப்படுகின்ற சகல ஒப்பந்தங்களிலும் மாநகர சபை சார்பில் முதல்வருடன் கையொப்பமிட்டு வலுப்படுத்தலாம்.**

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு.சிவம் பாக்கியநாதன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.தம்பிராஜா இராஜேந்திரன்.**

## 06.அதிகாரக் கையளிப்பு (06)

**1989.01.20ம் திகதிய 541/17 ம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவுறுத்தலின் பிரகாரம், பாகம் III, நிதிசார் ஒழுங்கு விதிகளுக்கு** அமைவாக, சபையின் நிதிசார் அலுவல்களை முகாமை செய்வதற்கும் அதனை நிருவகிப்பதற்கும் திணைக்களத்திற்குப் பொறுப்பாக **பிரதான நிதி அலுவலராக மாநகர ஆணையாளர்** செயற்படுவார் எனவும், எல்லா அரசிறை சேகரிப்பு பணிகள் உள்ளிட்ட சபையின் நிதிசார் அலுவல்கள் முழுவதனையும் முகாமை செய்வதற்கும், நிதி நிருவாகத்திற்குப் பொறுப்பாக இருப்பதற்கும் மேலும், சபைக்கும், அதன் குழுக்களுக்கும் தோதாகக்கூடியவாறான நிதிசார் ஆலோசனைகளை வழங்கவும் பொறுப்பாக இருப்பார்.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு.துரைசிங்கம் மதன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.மா.தியாகராஜா ஸ்ரீஸ்கந்தராஜா.**

## 07. அதிகாரக் கையளிப்பு (07)

மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் பணிப்புரைக்கமைவாகவும், உள்ளூராட்சி திணைக்களங்களின் நடைமுறைகளுக்கிணங்கவும், **மாநகர சபைக் கட்டளைச் சட்டம் 189 க்கு இணங்கவும்,** சபையினுடைய செலவீனங்களுக்காக நிதிசார் விடயங்களைக் கையாள்வதில் பின்வரும் ஒழுங்கு முறை பின்பற்றப்படும்.

**சிபாரிசு செய்தல்** : நிதிக்குழு

**அதிகாரகமளித்தல் :** மாநகர சபை

**அனுமதி வழுங்கல்** : கௌரவ முதல்வர் மற்றும் மாநகர ஆணையாளர்
**(ஆணையாளர் அனுமதி வழங்கும் எல்லை சபையில் தீர்மானம் ஒன்றின் மூலம் நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டதாகும். கௌரவ முதல்வர் அனுமதி வழங்கும் எல்லை சபையில் தீர்மானம் ஒன்றின் மூலம் அதிகாரகமளிக்கப்பட்ட வேலையொன்றிற்கான அல்லது திட்டம் ஒன்றிற்கான முழுப்பெறுமதியுமாகும்)**

**உறுதிப்படுத்தல்** : மாநகர ஆணையாளர் / கணக்காளர்
**கொடுப்பனவு** : கணக்காளர்.

**காசோலையில் உத்தியோக பூர்வமாக கையொப்பமிடல்** : மாநகர சபை கட்டளைச் சட்டம் 189ம் பந்தியின் படி பின்வரும் உத்தியோகத்தர்கள் கையொப்பமிட வேண்டும்.

**முதலாவது கையொப்பம்** - மாநகர ஆணையாளர் / கணக்காளர்
**இரண்டாவது கையொப்பம்** - நிர்வாக உத்தியோகத்தர் / நிதி உதவியாளர்

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு. சிவம் பாக்கியநாதன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. துரைசிங்கம் மதன்.**

## 08. அதிகாரக் கையளிப்பு (08)

**முன் அனுமதி.**

வழமையான பின்வரும் விடயங்களை மாநகர சபையில் விதிக்கப்படும் வரையறைகளுக்குட்பட்டு **மாநகர ஆணையாளர் அனுமதி வழங்குவதற்கும், நிறைவேற்றுவதற்கும்** மாநகர சபையினால் முன் அனுமதியளிக்கப்பட்டது.

## 08.1. சம்பளங்களும் கூலிகளும்.

A. நிரந்தர உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த சம்பளம்.

B. கௌரவ முதல்வர், கௌரவ பிரதி முதல்வர், கௌரவ சபை உறுப்பினர்களுக்கான மாதாந்த அமர்விற்கான கொடுப்பனவு.

C. அமைய, நாளாந்த, ஒப்பந்த அடிப்படையில் கடமை புரிகின்ற ஊழியர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு.

இவை தொடர்பாக மாநகர சபையினால் **மாநகர ஆணையாளருக்கு** முன் அனுமதியளிக்கப்படுகிறது.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு.விஜயகுமார் பூபாலராஜா.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திருமதி. சசிகலா விஜயதேவா.**

## 08.2. பயன்பாட்டு சேவைகள்.

சபைக்கான எரிபொருள், மின்சாரம், தொலைபேசி மற்றும் குடிநீர் கட்டணங்களைச் செலுத்துவதற்கான முன் அனுமதி பின்வரும் நிபந்தனைகளோடு, அதாவது இவைகள் வழமையான பாவனை அளவினைத் தாண்டும் போது நிதிக்குழுவினூடாக அதனை சபைக்கு தெரிவித்தல் வேண்டும் எனவும், மேலும் இவற்றிக்கான செலவினத்தைக் குறைப்பதற்கான வழிவகைகளை நடைமுறைப்படுத்த குறிப்பிட்ட குழுக்களும், உரிய உத்தியோகத்தர்களும் முன்வருவதோடு, மாதாந்த அறிக்கைகளையும் சமர்ப்பித்தல் வேண்டும் எனவும் நிபந்தனையிட்டு மாநகர சபையினால் **மாநகர ஆணையாளருக்கு** அனுமதியளிக்கப்படுகிறது.

## 08.3. வழங்கு பொருட்கள்.

நுகர்வுப் பொருட்கள் (எரிபொருள்-பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய்,Oil பாவனைக்கான கொடுப்பனவு, நூலகங்கள் மற்றும் அலுவலகத்திற்கான பத்திரிகைகள் சஞ்சிகைகள்) காகிதாதிகள், மருந்துப்பொருட்கள், மற்றும் **நிதிக்குழு அனுமதி ஏலவே பெறப்பட்டிருக்கும் பட்சத்தில்** மூலப்பொருட்கள் மற்றும் தளபாடங்கள் - உபகரணங்கள் என்பவற்றிக்கான கொடுப்பனவை மேற்கொள்வதற்கு, அனுமதிக்கப்பட்ட எல்லைக்குள், இவை தொடர்பான மாதாந்த அறிக்கையினைக் கணக்காளர் நிதிக்குழுவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் மாநகர ஆணையாளருக்கு முன் அனுமதி வழங்கப்படுகிறது.

## 08.4. முற்பணம்

### A. விழா முற்பணம்

உரிய அரச சுற்று நிருபத்திற்கு அமைய செயற்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன், **மாநகர ஆணையாளருக்கு** முன்அனுமதி வழங்கப்படுகின்றது.

### B. பிரயாண முற்பணம்.

உரிய அரச சுற்று நிருபத்திற்கு அமைய செயற்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன், **மாநகர ஆணையாளருக்கு** முன்அனுமதி வழங்கப்படுகின்றது.

C. சபையின் பாவனையில் உள்ள வாகனத்திற்கு ஏற்படும் அவசர செலவீனம் - ரூபா 25,000.00 வரையான செலவீனத்தை மாநகர ஆணையாளர் மேற்கொள்வதற்கு முன்அனுமதி வழங்கப்படுகின்றது.

D. அனர்த்தம் ஒன்று ஏற்படும் போது முதல்வரின் ஒப்புதலுடன் தேவைக்கேற்ப செலவு செய்வதற்கான முன் அனுமதியானது, **மாநகர ஆணையாளருக்கு** வழங்கப்படுகின்றது.

## 08.5. பின்வரும் விடயங்களுக்கான கொடுப்பனவை செய்வதற்கு, உரிய அரச சுற்று நிருபம் மற்றும் அரச நடைமுறைகளுக்கு அமைய செயற்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் மாநகர ஆணையாளருக்கு முன் அனுமதியளிக்கப்படுகின்றது.

A. அனுமதிக்கப்பட்ட விடுமுறைகால மற்றும் கடமை புகையிரத ஆணைச்சீட்டுக்களுக்கான கொடுப்பனவு.

B. சபையினால்/நிதிக்குழுவினால் வரையறை செய்து அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்களது மேலதிக நேரக் கொடுப்பனவு, விடுமுறை நாட்களில் கடமை புரிந்தமைக்கான (PH) கொடுப்பனவு,

C. அனுமதிக்கப்பட்ட பிரயாணக் கொடுப்பனவு (Travelling Claim)க்கான கொடுப்பனவு,

D. அனுமதிக்கப்பட்ட சீருடை (Uniform) வழங்குவதற்குரிய செலவீனத்திற்கான கொடுப்பனவு.

## 08.6. உபசரணைச் செலவு

ஒரு நிகழ்விற்கு சிற்றுண்டிக்கென ரூபா 5,000.00 வரையானதும் மற்றும் ஒரு நிகழ்விற்கு உணவோடு சேர்த்து ரூபா 25,000.00 வரையானதுமான கொடுப்பனவினை மாநகர ஆணையாளர் மேற்கொள்வதற்கு மாநகர சபையினால் முன் அனுமதி வழங்கப்பட்டது.

## 08.7. உத்தியோகத்தர்களுக்கான கடன் வழங்குதல்

உரிய அரச சுற்று நிருபம் மற்றும் அரச நடைமுறைகளுக்கு அமையச் செயற்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் மாநகர சபையினால் மாநகர ஆணையாளருக்கு முன் அனுமதியளிக்கப்படுகிறது.

## 08.8. வாகன அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதி (License & Insurance)

உரிய அரச சுற்று நிருபம் மற்றும் அரச நடைமுறைகளுக்கு அமைய செயற்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் மாநகர சபையினால் மாநகர ஆணையாளருக்கு முன் அனுமதியளிக்கப்படுகின்றது.

## 08.9. இவ் விடயங்களுக்கு மேலதிகமாக பின்வரும் சேவைகளை நிறைவேற்றுவதற்காக செய்யப்படும் நிலையான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு மாநகர சபையினால் மாநகர ஆணையாளருக்கு முன் அனுமதியளிக்கப்படுகின்றது.

**A.** **திட்டமிடல் குழுக் கூட்டத்தில்** கலந்து கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் அமர்விற்கான கொடுப்பனவு தொடர்பாக, தற்போது வழங்கப்பட்டுவரும் ஒரு உறுப்பினருக்குரிய தொகையான 1,000/- ரூபாவை மீள பரிசீலனைக்கு உட்படுத்தும் வகையில் **திட்டமிடல் குழுக்கான** (Planning Committee) Term of Reference (TOR)ஐ தயாரித்து சமர்ப்பிக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் மாநகர சபையினால் மாநகர ஆணையாளருக்கு முன் அனுமதியளிக்கப்படுகின்றது.

**B.** **மாநகர சபையினால் கொடுவாமடு திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்திற் கொட்டப்படும் கழிவுகளுக்கான கட்டணங்களை வழங்குவதற்கு** மாநகர சபையினால் மாநகர ஆணையாளருக்கு முன் அனுமதியளிக்கப்படுகின்றது.

**C.** Pit Cleaning செய்வதற்கு – சேவையில் ஈடுபடுகின்ற சாரதி மற்றும் தொழிலாளி , வேலை மேற்பார்வையாளர், பொது சுகாதார பரிசோதகர் ஆகியோருக்கான கொடுப்பனவாக முறையே – 350/= , 500/= , 200/= , 200/= என்ற அடிப்படையில் மேற்கொள்வதற்கு மாநகர சபையினால் மாநகர ஆணையாளருக்கு முன் அனுமதியளிக்கப்படுகின்றதுஇ

**D.** கட்டாக்காலி மாடுகளை பிடித்து கட்டுதற்கான கொடுப்பனவுகள் மாடு ஒன்றுக்கு (உருப்படி) 1,000/= ரூபா வீதம் கொடுப்பனவு செய்வதற்கு மாநகர சபையினால் மாநகர ஆணையாளருக்கு முன் அனுமதியளிக்கப்படுகின்றது.

**E.** கட்டாக்காலி நாய்களை பிடிப்பதற்கான கொடுப்பனவை செய்வதற்கு, உப விதிகளை தயாரிக்கும் படி உரிய உத்தியோகத்தரை பணிக்குமாறு மாநகர ஆணையாளர் சபையினால் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு.சச்சிதானந்தம் கமலரூபன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.மயில்வாகனம் ரூபாகரன்.**

## 09. அதிகாரக் கையளிப்பு (09)

**அதிகாரக கையளிப்பு - முன் அனுமதி**

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 14 ஆம் பந்தியின் 3 ஆம் பிரிவிற்கு அமைவாக கௌரவ மாநகர முதல்வர் அவர்கள் சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் என்ற வகையில் தமது கடமைகளை நிறைவேற்றுவதற்காக **சபையின் பாவனையில் உள்ள வாகன திருத்தத்திற்கு ஏற்படும் அவசர செலவினத்திற்கும், அனர்த்தமொன்று ஏற்படும் போது தேவைக்கேற்ப செலவு செய்வதற்கும், சபைக்கு தேவையான வழங்கு பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் (நுகர்வுப் பொருட்கள், காகிதாதிகள், மருந்துப் பொருட்கள், மூலப்பொருட்கள், தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்) உபசரணைச் செலவினை செய்வதற்கும் இவற்றின் மீது ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள எல்லையைத் தாண்டும்போது அதனை செய்வதற்கும்** மாநகர சபையினால் முன் அனுமதி வழங்கப்படுகிறது.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு.அந்தோனி கிருரஜன்**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.சீனித்தம்பி ஜெயந்திரகுமார்.**

## 10.அதிகாரக் கையளிப்பு (10)

**பிரிவுப் பொறுப்புக்கான அதிகார கையளிப்பு.**

A. மாநகர சபையின் பொதுச் சுகாதாரம், நூலகம் மற்றும் ஆதனவரிப்பகுதியின் செயற்பாடுகளை முகாமை செய்வதற்கும், அப் பகுதியின் வரி அறவீட்டு விடயங்களை கையாழுவதற்குமான அதிகாரங்கள் மாநகர பிரதி ஆணையாளர் திரு.உ.சிவராஜா அவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

B. மாநகர சபையின் நானாவித வருமானப் பகுதியினை முகாமை செய்து வரி வருமானங்களையும், நிலுவை வரி வருமானங்களையும் அறவீட்டுக் கொள்வதற்குமான அதிகாரமானது மாநகர சபையின் பிரதம கணக்காளர் திருமதி.ஜி.எச்.சிவராஜா அவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

C. மாநகர சபையின் வேலைகள் மற்றும் திட்டமிடல் பகுதிகளை மாநகர சபையின் கௌரவ முதல்வர் மற்றும் மாநகர ஆணையாளர் ஆகியோரின் ஒப்புதலுடன் இணைந்து முகாமை செய்து கொள்வதற்கும், சபை தீர்மானங்களின் அடிப்படையில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்குமான அதிகாரங்கள்

மாநகர பொறியியலாளர் திருமதி. சித்திராதேவி லிங்கேஸ்வரன் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு.மயில்வாகனம் ரூபாகரன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.சீனித்தம்பி ஜெயந்திரகுமார்.**

## ➢ கௌரவ உறுப்பினர் திரு.சிவானந்தன் மேகராஜ் அவர்களின் கன்னி உரை.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், புதிதாக எம்முடன் இணைந்து கொண்டுள்ள கௌரவ உறுப்பினர் திரு.சிவானந்தன் மேகராஜ் அவர்கள் தனது கன்னி உரையினை நிகழ்த்த அனுமதி கோரியிருந்தார். அவருக்கான சந்தர்ப்பம் தற்போது வழங்கப்படுவதாகத் தெரிவித்து உரையாற்றுமாறு கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.சிவானந்தன் மேகராஜ் அவர்கள் தனது கன்னி உரையினை நிகழ்த்துகையில், சபைக்கு தலைமை தாங்கிக் கொண்டிருக்கின்ற கௌரவ முதல்வர் அவர்களே, கௌரவ பிரதி முதல்வர், கௌரவ உறுப்பினர்கள் மற்றும் புதிதாக நியமனம் பெற்று வந்திருக்கும் ஆணையாளர், உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் என அனைவருக்கும் எனது இந்நேர வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மட்டக்களப்பு மாநகர சபையிலே 6ஆம் வட்டாரமாகிய கருவேப்பங்கேணியில் போட்டி இட்டு தெரிவு செய்யப்பட்ட காலஞ் சென்ற கௌரவ உறுப்பினர் திரு.வேலுப்பிள்ளை தவராஜா அவர்களது பணியினைத் தொடர்வதனையிட்டு நான் பெருமிதம் அடைகின்றேன். இலங்கை தமிழரசுக் கட்சியின் தடம் மாறாத் தொண்டனும், சிறந்த இலக்கியவாதியும், சிறந்த ஆசானுமாக விளங்கியவர் காலஞ் சென்ற தவராஜா ஐயா அவர்களாகும். 133 ஆண்டு காலமாக ஆங்கிலேயர் ஆட்சியில் இருநத இலங்கை தேசமானது 1948.02.04ஆம் திகதி சுதந்திரமடைந்ததாக கூறப்படுகின்றது. ஆனால் என்னைப் பொறுத்த வரைக்கும் இலங்கையில் சுதந்திரமடைந்தது ஒரு பெரும்பான்மை சமூகமே தவிர, நாங்கள் அல்ல என்பது எனது கருத்து. கடந்த 72 வருட காலமாக எமது சுதந்திரத்துக்காக அரசியல் ரீதியாகவும், அகிம்சை வழியிலும், ஆயுதப் போராட்ட ரீதியிலும், எமது மக்களின் சமூக நலனுக்காகவும், சம உரிமைக்காகவும் போராடிய சமூகமாகவே எமது தமிழ் சமூகம் காணப்படுகின்றது. பெரும்பான்மைச் சமூகத்தில் இருந்து அரசியலுக்கு வருகின்ற அரசியல் பிரதிநிதிகள் இன்னமும் எமது இனத்தையும், தமிழ் மொழியையும் அடக்குபவர்களாகவே காணப்படுகின்றனர் என்பதனை ஒரு சில உதாரணங்கள் மூலம் கூறலாம் என நினைக்கின்றேன்.1950ஆம் ஆண்டு தமிழில் தேசிய கீதம் பாடலாம் எனக் கூறப்பட்டு இருந்தது. ஆனால் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு அதிகூடிய வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதி திரு. கோட்டபாய அவர்களால் 2020.02.04ஆம் திகதி சுதந்திர தினத்தின் போது அது மறுக்கப்பட்டு இருந்தது. 2021ஆம் ஆண்டு கொரொனா வைரஸ் தொற்றினைக் காரணம் காட்டி நாட்டினை மாவட்ட ரீதியிலும், மாகாண ரீதியிலும் முடக்கினார். தற்போது 2022ஆம் ஆண்டு சுதந்திர தினத்துக்குப் பின்னர் நாட்டில் எரிபொருள், எரிவாயு என்பவற்றின் இறக்குமதியினைக் குறைத்தார். பசுமைப் புரட்சி எனும் பேரில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பறித்தார், வாக்களித்த மக்களை வீதியில் வரிசையாக நிறுத்தியுள்ளார். இவரது சேவை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது. இதனை நாங்கள் மனதில் நிறுத்திக் கொண்டு, எனது கன்னி உரையினை மேலும் தொடர்வதை நிறுத்திக் கொண்டு, இறைபதம் அடைந்த கௌரவ உறுப்பினர்

திரு.வேலுப்பிள்ளை தவராஜா ஐயா அவர்களது ஆசைப்பாடு எனது காதிற்கும் எட்டிய வகையில் அதனை நிறைவேற்றும் வகையில், மாநகர சபையின் முன்வாயிலில் வைக்கப்பட்டிருந்த மாநகர சபையின் 1வது உழவு இயந்திரம் அதே இடத்தில் மீள வைக்கப்பட வேண்டும் என்பதாகும். எனவே மாநகர சபையின் 38 உறுப்பினர்களின் ஒருமித்த பிரேரணையாக இதனை இவ்வுயரிய சபையில் சமர்பிக்கின்றேன். அந்த வகையில் எனக்கு இந்த வாய்ப்பினை அளித்த கௌரவ முதல்வருக்கு நன்றியைத் தெரித்து அமர்ந்தார்.

## ➢ 2022ம் ஆண்டு குத்தகைக்கு வழங்கப்பட்ட சந்தைகள், வரி வசூலிப்பு நிலையங்கள், கடைகள் விபரம்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், மாநகர சபையின் சந்தைகள், வரி வசூலிப்பு நிலையங்கள், கடைகள் என்பவற்றை 2022ம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக நானாவித வருமானப் பகுதியின் ஊடாக கேள்வி கோரல் நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படாத நிலையில் சபைப் பகுதியின் ஊடாக இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் காரணமாக பின்வரும் குத்தகைகள் வழங்கப்பட்டு அதன் மூலமான வருமானமும் சபைக்கு ஈட்டப்பட்டுள்ளது என்பதை தகவலாக அறியத் தருகின்றேன்.

அவையாவன,

| இல | குத்தகை நிலையங்களின் விபரம் | பெயர் | குத்தகை வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| **மட்டக்களப்பு பொதுச் சந்தைக் கடைகள்** | | | |
| 1 | இல:04 பொதுச்சந்தை வாழைப்பழ வரிசைக்கடை | திரு.கண்ணன் பிறிக் க்ஷாயணன் | 10,500.00 |
| 2 | இல:14 பொதுச்சந்தை வாழைப்பழ வரிசைக்கடை | திரு.வடிவேல் கைலாயநாதன் | 10,500.00 |
| 3 | இல:06 பொதுச்சந்தை மரக்கறி வரிசைக்கடை | திரு.க..செந்தூரன் | 9,100.00 |
| 4 | இல:07 பொதுச்சந்தை மரக்கறி வரிசைக்கடை | | 9,100.00 |
| 5 | இல:10 பொதுச்சந்தை மரக்கறி வரிசைக்கடை | திருமதி.நூர்மர் ஸீனா | 10,500.00 |
| 6 | இல:18 பொதுச்சந்தை மரக்கறி வரிசைக்கடை | திரு.கமீது லெப்பை லத்தீப் ஜீனைதீன் | 10,500.00 |
| 7 | இல:20 பொதுச்சந்தை மரக்கறி வரிசைக்கடை | திரு.முகமட் முபாரக் ஐயூப் | 10,500.00 |
| 8 | இல:07 பொதுச் சந்தை பலசரக்கு வரிசைக்கடை | திரு.அ.கா.அபூ உபைதா நஜீம் | 155,000.00 |
| 9 | இல:26 பொதுச் சந்தை மேல்மாடிக் கடை | திரு.முத்து நைல்ஸ் | 8,200.00 |
| **குளோபல் டிரேட் சென்டர் கடைத் தொகுதி** | | | |

| | | | |
|---|---|---|---|
| 10 | குளோபல் ட்ரேட் சென்டர் இல:3 | திரு.த.கிரிசாந்தன் | 92,000.00 |
| 11 | குளோபல் ட்ரேட் சென்டர் இல:5 | திரு.செல்லத்தம்பி அல்வட் | 91,100.00 |
| 12 | குளோபல் ட்ரேட் சென்டர் இல:6 | திரு.முஹமட் றாபிக் | 100,500.00 |
| 13 | குளோபல் ட்ரேட் சென்டர் இல:7 | திருமதி.லக்சிதா ராஜ்மோகன் | 100,500.00 |
| 14 | குளோபல் ட்ரேட் சென்டர் இல:8 | திருமதி.லக்சிதா ராஜ்மோகன் | 100,500.00 |
| 15 | குளொபல் ட்ரேட் சென்டர் இல:9 | திரு.சி.கோபிநாத் | 90,000.00 |
| 16 | குளோபல் ட்ரேட் சென்டர் இல:10 | திரு.வீரக்குட்டி மகேந்திரன் | 100,100.00 |
| 17 | குளோபல் ட்ரேட் சென்டர் இல:12 | திரு.மகேந்திரன் கிருஸ்ணகாந்தன் | 100,100.00 |
| **இருதயபுரம் சந்தைக் கடைகள்** | | | |
| 18 | இருதயபுரம் மாட்டிறைச்சிக்கடை | திரு.சின்னத்துரை வரதராஜன் | 801,707.00 |
| 19 | இருதயபுரம் கோழியிறைச்சிக்கடை | திரு.சின்னத்துரை வரதராஜன் | 337,500.00 |
| **கல்லடி கடைகள்** | | | |
| 20 | கடல் உணவு விற்பனையகம் (Sea food terrace) | திரு.ராஜ சேகரம் கோபிராஜ் | 105,000.00 |
| 21 | கல்லடி கடற்கரை உணவகம் இல.02 | திரு.சின்னத்துரை தனராஜ் | 50,000.00 |
| **கல்லடி பிரிட்ஜ் மார்ட் கடைத் தொகுதி** | | | |
| 22 | கல்லடி பிரிஜ் மார்ட் கடை இல:01,கருவாடு வகை-மீன் இறால் | திரு.பூ.சற்குணராசா | 25,100.00 |
| 23 | கல்லடி பிரிஜ் மார்ட் கடை இல:04,கருவாடு வகை-மீன் இறால் | திரு.எஸ்.கோபால் | 24,300.00 |
| 24 | கல்லடி பிரிஜ் மார்ட் உணவகம் | திரு.பூ.சற்குணராசா | 136,100.00 |
| **வாகன மற்றும் நாளாந்த வரி வசூல் நிலையங்கள்** | | | |
| 25 | பொதுச்சந்தை து.வண்டி, மோட்டார் சைக்கிள் வரி பாதுகாப்பு நிலையம் (இரு வழி) | திருமதி.சதீஸ்குமார் மேனகா | 860,500.00 |

| | | | |
|---|---|---|---|
| 26 | மட்/போதனாவைத்தியசாலை மத்தியாஸ் வீதி மட்டும் ஆட்டோ, மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டி தரிப்பு நிலையம் | திருமதி.கீலா ரமேஸ்குமார் | 3,803,500.00 |
| 27 | காந்தி சதுக்க நீதிமன்ற வாகன தரிப்பிடம் | திருமதி.ஜெயக்குமார் ஜெயந்தினி | 676,000.00 |
| 28 | கல்லடி கடற்கரை வாகன தரிப்பு நிலையம் | திருமதி.யூக்கிறிஸ்டியா வல்தஸார் | 360,100.00 |
| 29 | கொக்குவில் வாராந்த சந்தை(திங்கட் கிழமைகளில் மாத்திரம்) | திருமதி.ஜெயக்குமார் ஜெயந்தினி | 377,000.00 |
| **நாவற்குடா சந்தைக் கடைத் தொகுதி** | | | |
| 30 | இல:01 நாவற்குடா புதிய சந்தைக்கடை | திரு.திருமேனி சதீஸ் | 60,100.00 |
| 31 | இல:02 நாவற்குடா புதிய சந்தைக்கடை | திரு.திருமேனி சதீஸ் | 60,100.00 |
| 32 | இல:01 நாவற்குடா பழைய சந்தைக்கடை | திரு.சின்னதுரை திருமேனி | 30,100.00 |
| 33 | இல:02 நாவற்குடா பழைய சந்தைக்கடை | திரு.தம்பியப்பா இராசதுரை | 15,200.00 |
| 34 | இல:03 நாவற்குடா பழைய சந்தைக்கடை | திரு.தங்கதுரை அன்னலக்ஸ்மி | 15,200.00 |
| 35 | இல:04 நாவற்குடா பழைய சந்தைக்கடை | திருமதி.சுதாகரன் கமலதர்சினி | 15,200.00 |
| 36 | இல:06 நாவற்குடா பழைய சந்தைக்கடை | திருமதி.மாரியம்மா துரைராசசிங்கம் | 15,000.00 |
| 37 | நாவற்குடா தற்காலிக கடை (நாவற்குடா மீன் சந்தைக்கு அருகில்) | திருமதி.மேரிமெற்றில்டா கிருஸ்ணபிள்ளை | 13,300.00 |
| **மத்திய பேருந்து நிலைய கடைத் தொகுதி** | | | |
| 38 | மத்திய பேருந்து நிலைய மலசல கூடம் | திரு.மயில்வாகனம் சுதாகரன் | 370,500.00 |
| 39 | மட்/மத்திய பேருந்து நிலைய கீழ்தள கடை இல-01 | திரு.கச்சி முகம்மது முகம்மது றிப்கான் | 72,000.00 |
| 40 | மட்/மத்திய பேருந்து நிலைய கீழ்தள கடை இல-02 | திரு.ஆதம்பாவா முஹமட் பௌஸான் | 72,650.00 |
| 41 | மட்/மத்திய பேருந்து நிலைய கீழ்தள கடை இல-03 | திருமதி.சித்ரா கலைக்குமார் | 70,100.00 |

| | | | |
|---|---|---|---|
| 42 | மட்/மத்திய பேருந்து நிலைய கீழ்தள கடை இல-04 | திரு.நயினா முகமட் அகமட் அறூஸ் | 74,850.00 |
| 43 | மட்/மத்திய பேருந்து நிலைய கீழ்தள கடை இல-05 | திரு.சுந்தரலிங்கம் பிரதீபன் | 71,000.00 |
| 44 | மட்/மத்திய பேருந்து நிலைய கீழ்தள கடை இல-06 | திரு.கைலாயப்பிள்ளை தர்சன் | 72,100.00 |
| 45 | மட்/மத்திய பேருந்து நிலைய கீழ்தள கடை இல-09 | திரு.கலந்தர்லெப்பை முகமட் றிகாஸ் | 75,550.00 |
| 47 | மட்/மத்திய பேருந்து நிலைய கீழ்தள கடை இல-12 | திருமதி.விஜயா ஜெயகாந்தன் | 70,500.00 |
| 48 | மட்/மத்திய பேருந்து நிலைய கீழ்தள கடை இல-13 | திருமதி.விஜயா ஜெயகாந்தன் | 70,500.00 |
| 49 | மட்/மத்திய பேருந்து நிலைய கீழ்தள கடை இல-15 | திருமதி.ச.மங்கலேஸ்வரி | 63,500.00 |
| 50 | மட்/மத்திய பேருந்து நிலைய கீழ்தள கடை இல-16 | திரு.பூபாலப்பிள்ளை மதிவதனன் | 63,000.00 |
| 51 | மட்/மத்திய பேருந்து நிலைய கீழ்தள கடை இல-17 | திரு.அப்துல் பாரி முஹம்மத் இபாம் | 70,500.00 |
| 52 | மட்/மத்திய பேருந்து நிலைய கீழ்தள கடை இல-18 | திரு.நவரெட்ணராஜா நவனீதன் | 100,500.00 |
| 53 | மட்/மத்திய பேருந்து நிலைய கீழ்த் தள கடை இல -19 (போசனசாலை) | திரு.விஸ்வநாதன் மனோகரன் | 150,100.00 |
| **முனை வீதிக் கடைகள்** | | | |
| 54 | கல்லடி கடற்கரை சிற்றுண்டிச்சாலை | திருமதி.அருள்ராசா இன்னாசியம்மா | 101,000.00 |
| 55 | மாநகர சபைச் சிற்றுண்டி சாலை | செல்லையா பிரின்சிலி நிகொலொஸ் ஜொராட செல்வராசா | 31,000.00 |
| 56 | கோட்டைப் பூங்கா சிற்றுண்டிச்சாலை | திருமதி.யூட் வியஸ்டா ஹேமச்சந்திர | 300,000.00 |
| **ஏனையவை** | | | |
| 57 | சுற்றுலா தகவல் மையம் | திரு.கனகராசா மயூரன் | 68,000.00 |
| 58 | நீச்சல் தடாகம் | திரு.ரி.சோமஸ்காந்தன் | 202,500.00 |
| **முனை வீதிக் கடைகள்** | | | |
| 59 | முனை வீதிக் கடை இல.01 | திரு.எச்.எம்.அப்துல் அஸீஸ் | 356,000.00 |
| 60 | முனை வீதிக் கடை இல.02 | திரு.எச்.எம்.அப்துல் அஸீஸ் | 301,000.00 |
| 61 | ஏணிப் படிக்கடை | திரு.முகம்மட் மீராலெப்பை ஹாஜா முகைதீன் | 152,000.00 |

| | | | |
|---|---|---|---|
| **கல்லடிச் சந்தை இறைச்சிக் கடைகள்** | | | |
| 62 | கல்லடி கோழியிறைச்சிக் கடை இல.01 | திரு.ச.நிஸாந்தன் | 151,000.00 |
| 63 | ஆட்டிறைச்சிக் கடை இல.02 | திரு.அக்பர் நவாஸ் | 160,000.00 |
| **பஜார் வீதிக் கடைகள்** | | | |
| 64 | 01ம் குறுக்கு பஜார் வீதிக் கடை | திரு. ஸ்ரீதரன் சிவதர்ஷன் | 226,000.00 |

சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி குத்தகைக்கு வழங்கப்பட்டோர் விபரங்கள் பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு. விஜயகுமார் பூபாலராஜா.**
**வழி மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திருமதி.சசிகலா விஜயதேவா.**

இவ்விடத்தில் பேசுகையில், இதுவரை கடமையாற்றிச் சென்ற மாநகர ஆணையாளர் அவர்களுக்கு நன்றித் தெரிவித்துக் கொண்டு புதிய ஆணையாளரை வரவேற்றுக் கொண்டவனாக, கௌரவ முதல்வர் அவர்களே, தாங்கள் குத்தகைக்கு வழங்கப்பட்டவர்களின் பெயர் விபரங்களை வாசித்திருந்தீர்கள். நாங்கள் ஒரு கூட்டத்தில் குத்தகைகளை வழங்குவதில் மாநகர சபையின் வரி இறுப்பாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தோம். அந்த நடைமுறை இங்கு பின்பற்றப்பட்டுள்ளதா? என வினவினார்

கௌரவ முதல்வர் அவர்கள், இதற்கு பதிலளித்துப் பேசுகையில், இதன் போது அவர்கள் மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் என்பதனை வாக்காளர் இடாப்பு, கிராம சேவையாளரினால் வதிவிடத்தினை உறுதிப்படுத்தி வழங்கப்படும் ஆவணம் என்பவற்றின் மூலம் பரிசீலித்தே தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

- **வருமான செலவின அறிக்கையும், நிலுவை வருமான முன்னேற்ற அறிக்கையும்.**

1) 2022 ஜனவரி மாதம் முடிவடைகின்ற நிலையில் எமது மொத்த வருமானம் 13% அறவிடப்பட்டுள்ளது. அதாவது மதிப்பீடு ரூபா.591 மில்லியனில் ரூபா. 62 மில்லியன் அறவிடப்பட்டுள்ளது. அதாவது மொத்த மீண்டுவரும் வருமானம் ரூபா.560 மில்லியனில் 12%மும், அதாவது ரூபா.62 மில்லியனும், மூலதன வருமானம் 1% மும் வருமானமாகப் பெறப்பட்டுள்ளது.

2) செலவினத்தை பாதீட்டுடன் ஒப்பிடுகையில், மொத்த மீண்டு வரும் செலவீனம் 4%மும், அதாவது ரூபா. 15 மில்லியனும், மூலதனச் செலவீனம் ரூபா. 5 மில்லியனும் செலவிடப்பட்டுள்ளது.
எனவே செலவிலும் மிஞ்சிய மொத்த வருமானமாக ரூபா 42 மில்லியன் காணப்படுகின்றது.

2022 ஜனவரி மாதத்திற்கான பண வரவு - செலவுகள் மற்றும் நிலுவை வருமான அறவீடுகள் பரிசீலிக்கப்பட்டு பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு. மாசிலாமணி சண்முகலிங்கம்.**
**வழி மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு. சச்சிதானந்தம் கமலரூபன்.**

- **விடுமுறை அனுமதி.**

1. கௌரவ உறுப்பினர் செல்வி.தயாளகுமார் அவர்கள் தனது சுகயீனம் காரணமாக இன்றைய அமர்விற்கு சமூகமளிக்க முடியாதிருப்பது பற்றி கௌரவ முதல்வர் அவர்களுக்கு குறுஞ் செய்தி ஊடாக அறிவித்துள்ளமையும்,

2. கௌரவ உறுப்பினர் திருமதி.மேரி கிருஸ்டினா சசிதரன் அவர்கள் தனது சுகயீனம் காரணமாக இன்றைய அமர்விற்கு சமூகமளிக்க முடியாதிருப்பதாக கடிதம் மூலம் அறிவித்துள்ளமையும்,

கௌரவ முதல்வர் அவர்களால் சபையினர்க்கு அறிவிக்கப்பட்டதற்கு அமைய அவர்களது விடுமுறைகள் பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திருமதி. சிவாகரன் சுலக்ஷனா.**
**வழி மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு. செல்வராசா குமார்.**

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெத்தினராஜா திலீப்குமார் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, இறைபதம் அடைந்த கௌரவ உறுப்பினர் திரு.வேலுப்பிள்ளை தவராஜா அவர்களது வேண்டுகோள், எமது கௌரவ உறுப்பினர்களது பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு வைக்கப்பட வேண்டும் என்பதாகும். எனவே அதனையும் கவனத்தில் கொண்டு நடைமுறைப் படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இறுதியில் கௌரவ முதல்வர் அவர்கள் அனைவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இன்றைய அமர்வு இத்துடன் நிறைவு பெறுவதாக அறிவித்தார்.

** சபை பிற்பகல் 12.10 மணியளவில் இனிதே நிறைவு பெற்றது **

| **தயாரித்தவர்:** | **சரிபார்த்து உறுதிப்படுத்தியவர்:** |
|---|---|
| திரு.சி.ராஜ்மோகன் | நா.மதிவண்ணன் |
| பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | மாநகர ஆணையாளர். |
| சபைப் பகுதி. | (பதில் செயலாளர்) |
| | மாநகர சபை, மட்டக்களப்பு |

**தியாகராஜா சரவணபவன்,**
கௌரவ முதல்வர்,
மாநகர சபை,
மட்டக்களப்பு